தகவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 11 வெள்ளிக்கிழமை (24.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:149

# ஐ.நாவின் மனிதாபிமானக் குழு வன்னிக்கு உடன் அனுப்பப்படும்



## செயலாளர் நாயகம் பான்-கி-மூன் அறிவிப்பு

பிரஸ்ஸெல்ஸ், ஏப்ரல் 24

இலங்கைக்கு - முல்லைத்தீவுக்கு - ஐக்கியநாடுகள் சபையின் மனிதாபிமானக் குழு ஒன்றை உடனடியாக தாம் அனுப்ப உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்-கி-மூன் நேற்று அறிவித்தார்.

முல்லைத்தீவில் மக்கள் சிக்குண்டுள்ள பாதுகாப்பு வலயத்தின் தற்போதைய உண்மையான நிலையை நேரில் கண்டறியும் பொருட்டும்-அங்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் பொருட்டும்-

பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டுள்ள மக்களைப் பாதுகாப்பதற்கு வழங்கக்கூடிய பணிகளைக் கண்டறியும் பொருட்டுமே-

மனிதாபிமானக் குழுவை அனுப்பத் தாம் முடிவு செய்திருப்பதாக சோமாலியாவில் நடைபெற்ற சர்வதேச நிதி உதவி மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் பிரஸ்ஸெல்ஸில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் வைத்து மூ[illegible]த விவரங்களை வெளியிட்டார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. குழு இப்போது இங்கு வருவது புத்திசாலித்தனமல்ல என்கிறார் கோத்தபாய

கொழும்பு, ஏப்.24

மோதல் நடைபெறும் பகுதிக்கு மனிதாபிமானக் குழுவை அனுப்புவதற்கு ஐ.நா. விடுத்த கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

ஐ.நாவின் குழு ஒன்று இந்தத் தருணத்தில் இங்கு வருவது புத்திசாலித்தனம் அல்ல என்றும் சுட்டிக்காட்டியுள்ளார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

அவர் பி.பி.சிக்கு இது குறித்துக் கூறியவை வருமாறு -

மோதலில் சிக்குண்டுள்ள பொதுமக்களை மீட்கும் நடவடிக்கை தற்போது இடம்பெறுகின்றது. இந்த நிலையில் மனிதாபிமானக் குழு அங்கு செல்வது புத்திசாலித்தனம் அல்ல. அது பொருத்தமற்றது.

போர்ப் பகுதியிலிருந்து வெளியேறிய மக்களுக்கு விரும்பினால் அந்தக் குழு உதவலாம். அரசுக்கும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## அ.தி.மு.க. தொண்டர் தீக்குளித்து மரணம்

சென்னை ஏப் 24

ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கக் கோரி அ.தி.மு.க தொண்டர் ஒருவர் நேற்று தீக்குளித்து மரணமானார்.

பண்ருட்டியைச் சேர்ந்த சுப்பிரமணி (வயது 43) என்பவரே கொளத்தூர் பாளையம் என்னும் இடத்தில் தீக்குளித்து மரணமானார் என்று அறிவிக்கப்பட்டது. (அ-1)

## பாதுகாப்பு வலயத்தில் 20,000 மக்களே எஞ்சியுள்ளனர் என்கிறார் இராணுவத்தளபதி

### அவர்களுடனேயே பிரபாவும் தங்கியுள்ளாராம்

கொழும்பு, ஏப்.24

முல்லைத்தீவு மக்கள் பாதுகாப்பு வலயத்தில் எஞ்சியுள்ள எட்டு சதுர கிலோமீற்றர் பிரதேசத்தில் இன்னமும் சுமார் 15 ஆயிரம் முதல் 20ஆயிரம் வரையான எண்ணிக்கையிலேயே பொதுமக்கள் இருக்கிறார்கள்.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல். சரத்பொன்சேகா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

பாதுகாப்பு வலயத்தின் தெற்குப் பகுதியில் இந்த மக்களுடன் விடுதலைப் புலிகளின் தலைவர் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர்களுக்காக நேற்று தமிழகத்தில் முழு அடைப்பு

சென்னை, ஏப்.24

இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தை நிறுத்தி, தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்கு இந்திய மத்திய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கோரி நேற்று தமிழ் நாட்டில் பொது வேலை நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பொது வேலை நிறுத்தத்தை மேற்கொள்ள தமிழக முதல்வர் மு. கருணாநிதி விடுத்த அழைப்பை தி.மு.கவின் கூட்டணிக்கட்சிகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் ஏற்று வேலைநிறுத்தத்தில் குதித்தன.

இந்த வேலை நிறுத்தத்தால் தமிழ் நாடு முழுவதும் பஸ் மற்றும் ரயில் போக்குவரத்துக்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டன. சில தொழிற் சங்கங்கள் பஸ் சேவையில் ஈடுபடமுற்பட்டபோதும் அவை வெற்றியளிக்கவில்லை. கடையடைப்புகளும் முழுமையாக இடம் பெற்றன. சென்னையில் சில அரச அலுவலகங்கள் திறந்திருந்த போதும் ஊழியர்கள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசின் விசேட தூதுவர்களாக மேனன், நாராயணன் இன்று கொழும்பு வருவர்

### ஜனாதிபதி மஹிந்தவுடன் பேசுவர்



புதுடில்லி, ஏப்.24

இலங்கையில் போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவருவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்தியாவின் இரண்டு தூதுவர்கள் இன்று கொழும்பு வருகின்றனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலர் சிவ்சங்கர் மேனன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் ஆகியோரே விசேட தூதுவர்களாக இன்று கொழும்பு வரவிருப்பதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

இலங்கையில் பொதுமக்கள் கொல்லப்படுவதையிட்டு இந்தியா கவலை கொண்டுள்ளது. கொலைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும், உடனடியாகத் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும் என்று இந்தியவெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

இந்தியாவின் இந்த நிலைப் பாட்டை ஜனாதிபதி மகிந்த ரஜபக்ஷவிடம் தெரிவிப்பதற்காக சிவ்சங்கர்மேனனும், எம்.கே. நாராயணனும் இலங்கை செல்வதாகவும் அமைச்சர் பிரணாப் முகர்ஜி பி.ரி.ஐ செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

இலங்கை நிலைவரம் தொடர்பாக கடந்த இரண்டு நாள்கள் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவை அடுத்தே இவர்கள் இலங்கைக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் இருந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோரை உறவினர்கள் சந்திக்க ஏற்பாடு

### அதுபற்றிய விவரங்கள் சில தினங்களில் அறிவிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப்.24

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து தென்மராட்சி மற்றும் வடமராட்சி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை அவர்களது உறவினர்கள் சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதுதொடர்பான விவரம் இன்னும் சில நாள்களில் அறிவிக்கப்படும். அத்துடன் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்கள் அவர் களது உறவினர்களுடன் தொடர்பு கொள்ள வசதியாக தொலை பேசி வசதிகளும் விரை வில் ஏற்படுத்தப்படுகின்றன.

[illegible] அதிபர் கே.கணேஸ் மேற்கண்ட தகவல்களை நேற்றிரவு தெரிவித்தார்.

முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள மக்களின் நிலமைகள் அவர்களுக்கான வசதிகள் குறித்து அரச அதிபர் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

* நேற்றிரவு வரை 3698, குடும்பங்களைச் சேர்ந்த 11,147 பேர் வந்து சேர்ந்துள்ளனர்.
* திருநகர், கோப்பாய் ஆசிரியகலாசாலை, மிருசுவில் தேவாலயம், கொடிகாமம் றோ.க. பாடசாலை, (16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் நேற்றைய தாக்குதல்களில் 287 பேர் பலி; 300 பேர் படுகாயமுற்றனர்

கொழும்பு, ஏப்.24

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதியில் படையினர் நேற்று நடத்திய அகோர ஷெல்த் தாக்குதல்களில் 287 பலியாகினர். 300க்கும் அதிகமானோர் படு காயமுற்றனர். கியூடெக் கரித்தாஸ் நிறுவனப் பணிப்பாளர் அருட்தந்தை வசந்தசீலன் அடிகளாரும் காயமுற்றார். இணையத்தளங்கள் நேற்றிரவு (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சனி, ஞாயிறு: புதிய பிரிவு
English Y.S.Soory 1.00
சிங்களம்: பேராசிரியர் லீலாகிருஷ்ணன் 2.00
2011 Arts - new 8 - 1
ECON: பிரதீபன்
நாவலர் வீதி முகப்பு

## விற்பனைக்கு

பாவிக்காத புத்தம்புதிய Honda 2800 மின் பிறப்பாக்கி (ஜெனறேட்டர்) விற்பனைக்குண்டு.
சிறி தணுசிகன் எலக்ரிக்கல்ஸ்,
இல. 385, கே.கே.எஸ். வீதி, சிவன் கோவிலடி, யாழ்ப்பாணம். 0776560594

## கோழிக் குஞ்சு விற்பனை

No.1 பைரகா, (BAIRAHA) புறொயிலர் குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். பிறிமா பேட்டுக்குஞ்சுகளும் உண்டு.
திருமகள் களஞ்சியம்
704, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3270, 077 4281084

## தவறிவிட்டது

இணுவில் மஞ்சத்தடி தெற்கு என்னும் முகவரியுடைய இளையதம்பி விஜயநிர்மலா என்பவரின் தே.அ.அட்டை (698280603V), வி.அ.அட்டை (0902023806) என்பன இணுவிலுக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ''நாதன் பிறதேர்ஸ்'', K.K.S. வீதி, இணுவில் என்னும் முகவரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு

Gold fish, Angel, Carps போன்ற மீன் இனங்களும் குருவிகள், அழகு கோழிகள், வான் கோழிகள், கினிக் கோழிகளும் விற்பனைக்குண்டு.
SOMASUNDARAM AQUARIUM
22, சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் 27.04.2009 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.
★ றாஜீவ் -
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

# மெய்வன்மை ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கான மெய்வன்மைப் போட்டிக்கு பொறுப்பான ஆசிரியர்களை இன்று வெள்ளிக்கிழமை யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்துக்கு வருகை தருமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(1)

# கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு உயர் தொழில்நுட்பவியல் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மு.ப. 10 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் இருந்து நிறுவனத்துக்கு பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் பழைய மாணவர் சங்கச் செயலாளர் வி.தயாபரன் தெரிவித்துள்ளார்.

(1)

# குடும்பப் பெண்ணின் சடலம் வெட்டுக்காயங்களுடன் மீட்பு

ஆனைக்கோட்டை, ஏப்.24

ஆனைக்கோட்டை யாவல் ஒழுங்கைப் பகுதியில் குடும்பப்பெண் ஒருவரின் சடலம் வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 2மணிக்கு இடம் பெற்ற சம்பவத்தில் சீலன் அமுதா (வயது 35) என்பவரே கொல்லப்பட்டுள்ளார்.

அவர் வீட்டில் இருந்த சமயம் அவர் வெட்டுக்காயங்களுக்கு இலக்காகி மரணமானார் என்றும் -

பின்னர் அவரது கணவனைக் கைது செய்துள்ளதாகவும் - மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் மரண விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(அ-1-78-20-100)

MONITORS - LCD
Samsung 17" LCD - 14250/-
View Sonic 17" LCD - 15900/-
HP/ Samsung/ Benq/ View Sonic 19" LCD - 17500/-

UPS 650 W
Intex 650 - 5100/-
DCP - 5100/-
Panora 650 - 5500/-
Prolink 650 - 5750/-

MONITORS - CRT
HP Pure Flat 17" - 9000/-
Prolink Pure Flat 17" - 10900/-
View Sonic 17" - 13000/-

UPS 1.2 KV (1200)
Power Tree 1200 (1.2 Kv) - 9700/-
Prolink 1200 (1.2 Kv) - 10500/-
Mercury 1200 (1.2 Kv) - 10900/-

HARD DISK
80 GB SATA - 4600/-
160 GB SATA - 5200/-
250 GB SATA - 5900/-
500 GB SATA - 8200/-
80 GB IDE - 4900/-
160 GB IDE - 5750/-

SUBWOOFWERS
Microlab 2.1 MII3 - 3100/-
Creative SBS 380 2.1 - 3750/-
Microlab 5.1 MIII3 - 6300/-
Creative 5.1 A500 - 7900/-
Microlab (Remote Model) - 7900/-

PEN DRIVE
1 GB - 550/-
2 GB - 850/-
4 GB - 1100/-
8 GB - 1900/-
16 GB - 4500/-

COMPUTER TABLE 3400/-

MP4, MP5 PLAYES (Sony, Orange)
* 2 GB (Expand 2GB)
* Camera * FM Radio
* MP3 * USB Cable
* Voice Recording
* Games * Driver CD
* Power Charger
* Head Phone
7500/-

SONY MP4 & MP3
* FM Radio * Games
* MP3 * MP4
* Head Phone
1 GB - 4500/-
2 GB - 5500/-

ACCESSORIES
* USB Optical Mouse - 450/-
* Key Board - 450/-
* Head Phone (with Mic) - 400/-
* Web Camera - 1300/-
* Speaker - 550/-
* Intex TV Card Internal - 2750/-
* VGA Card PC Express 512 MB - 6500/-
* VGA Card PC EXpress 1 GB - 9500/-
* ATX Casing Black (with Power Supply) - 3400/-

SCANNER
Mustek - 6600/-
Cannon - 6750/-
HP - 9700/-

RAM (Memory)
DDR II 1 GB 800 - 1650/-
DDR II 2 GB 800 - 2750/-
DDR I 512 MB 400 - 2750/-
DDR I 1 GB 400 - 4900/-
SD Ram 256 MB - 1500/-

PORTABLE HARD DISK
160 GB USB Power - 9400/-
250 GB USB Power - 10900/-
320 GB USB Power - 13250/-

MUSIC WORLD & COMPUTERS
141B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி.
தொலை பேசி/ பெக்ஸ்: 021 222 6554
Warranty Valid for 1 Year
Stock Available

கேள்வி அறிவித்தல் - இல - 04,05
கட்டடங்கள் திணைக்களம்
வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம்.
கால நீடிப்பு

''உதயன்'' பத்திரிகையில் 26.03.2009, 31.03.2009 ஆகிய திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி கேள்வி அறிவித்தல் தொடர்பானது.

கேள்விகள் திறக்கும் திகதி 07.05.2009 பி.ப. 3 மணியாக நீடிப்புச் செய்யப்படுகிறது.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம், (வ.மா.),
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர்.



கேக் கண்காட்சி

டெல்மேஜ் டிஸ்ரிபியூட்டஸ் பிறைவேற் லிமிட்டட் ஸ்தாபனத்தாரின் ஆதரவுடனும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, இலக்கம் 370, ஸ்ரீரங்கன் என்ரபிறைஸ் ஸ்தாபனத்தாரின் அனுசரணையுடனும் PRINCE நிறுவனத்தாரால் Chundikuli Girls' College இல் கடந்த 17,18 ஆம் திகதிகளில் நடைபெற்ற Cake கண்காட்சி

அனைவரது வேண்டுகோளிற்கிணங்க மீண்டும் யாழ்.நகரில்.
இடம்: சன்மார்க்க மகா வித்தியாலயம் (பெருமான் கோவிலுக்கு முன்பாக)
காலம்: ஏப்ரல் 25, 26 ஆம் திகதிகள் (சனி, ஞாயிறு)
நேரம்: காலை 9 - மாலை 5 மணிவரை
நுழைவு 20/-

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பிறின்ஸ் நிறுவனம் முதன் முறையாக கற்பித்தல் வகுப்புகள் (Cake icing, Saree work, Painting ) மே மாதம் 5 ஆம் திகதி மு.ப.10.30 முதல் ஆரம்பமாகிறது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

477, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2490

நிர்வாகி : பிறின்ஸ் நிறுவனம்.

மீள் கேள்வி அறிவித்தல் - இல - 06
கட்டடங்கள் திணைக்களம்
வடக்குமாகாணம், யாழ்ப்பாணம்.

01. செஞ்சிலுவைச் சங்கங்களின் சர்வதேச ஸ்தாபனத்திடமிருந்து சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர், யாழ்ப்பாணம் அவர்கள் கீழ்வரும் வேலைகளுக்காக நன்கொடையொன்றைப் பெற்றுள்ளார்.

02. பிராந்திய பணிப்பாளர், சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம் சார்பாக தலைவர், மாவட்ட கேள்விச் சபை, அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். அவர்களால் தகுதி வாய்ந்த சகல கேள்விதாரர்களிடமிருந்தும் வல்வெட்டித்துறைப் பிராந்திய வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவுள்ள கீழ்வரும் வேலைக்கான மூடிய கேள்விகள் 18.05.2009 பிற்பகல் 03.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்

| தொ. இல | ஒப்பந்த குறியீட்டு இல. | ஒப்பந்த வேலை விவரம் | இக்ராட் தரம் | கேள்வி பிணை | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01. | JF/BD/GA/HS/04/2009 | வைத்தியர்களுக்கான விடுதி நிர்மாணித்தல் பிராந்திய வைத்தியசாலை வல்வெட்டித்துறை. | M5/C6 | 174,000.00 | 1000.00 |

03. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல கேள்விதாரர்களும் கொண்டிருக்க வேண்டும்.
   i) மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ICTAD தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ii) ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்விதகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   iii) முன்னைய வேலைகளில் மோசமான, நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் கூடாது.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும், கேள்வி ஆவணங்களையும் இலவசமாக அலுவலக நேரத்தில் பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா) யாழ்ப்பாணம் (தொ.இல. 021 222 2632) பரிசீலிக்கமுடியும்.

05. கேள்வி ஆவணங்களை 27.04.2009 தொடக்கம் 12.05.2009 பி.ப. 3.00மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணம் (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா), யாழ்ப்பாணத்தில் செலுத்தி அலுவலக நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.

06. மூடிய கேள்விகளை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 18.05.2009 பிற்பகல் 03.00 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்க வேண்டும். உடனடியாக கேள்வி திறக்கப்படும். இந் நேரம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.

07. மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்த செலவீனங்களுக்கும் தொழில் தருநர் பொறுப்பாக மாட்டார்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் (வ.மா),
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## எல்லோரும் ஒருவழிப்பாதைப் பயணிகளே!

முல்லைத்தீவில் போர் நிறுத்தம் என்பது வெறும் கானல் நீர் என்றாகிவிட்டது. போரினால் மக்கள் அன்றாடம் அழிந்து கொண்டிருப்பது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை என்பதனைக் கருத்தில் கொள்ளும் நிலை, வெறும் பேச்சளவிலும் அறிக்கை வடிவிலுமே காணப்படுகிறது. மனிதாபிமானப் பிரச்சினையே அரசியல் பிரச்சினையாக மாறுவது இயல்பு; வழமை. முல்லைத்தீவில் மனிதாபிமான விவகாரத்தை உரிய வேளையிலேயே கையாண்டு மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு எந்தத் தரப்பும் அக்கறை காட்டுவதாக இல்லை. அதனை நிரந்தர விவகாரமாக்குவதை நிறுத்துவதற்கு எவரும் மனங்கொள்வதாக இல்லை.

ஐக்கிய நாடுகள் சபையும் சரி, ஏனைய சர்வதேச நாடுகளும் சரி, கொலைகள் நிறுத்தப்படவேண்டும், மனிதப் பேரவலம், பேரனர்த்தம் வராமல் தடுக்கப்படவேண்டும் என்று அறிக்கை வெளியிடுவதுடன் நின்றுவிடுகின்றன. போர் நிறுத்தம் ஒன்றை ஒரு குறிப்பிட்ட காலத்துக்காவது மேற்கொள்ளச் செய்வதன் மூலமே மனிதாபிமானப் பேரவலத்தைத் தடுக்க முடியும் என்பது அதனைக் கோருவோருக்குத் தெரியாதது அல்ல.

ஆனால் அந்தளவுக்கு ஏற்ற கரிசனையும் மனித நேயத்தின் பாற்பட்ட அர்ப்பணிப்பும் ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேசத்திடம் இருப்பதாகப் புலப்படவில்லை. தற்போதைய நிகழ்வைத் தடுப்பதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கையில் - செயற்பாட்டில் - ஈடுபடும் மனவன்மையைக் காண இயலவில்லை.

மற்றவர் அல்லது அடுத்த நாடு பேரழிவைத் தடுக்குமாறு குரல் கொடுத்திருப்பதால் நாமும் அவ்வாறே செய்ய வேண்டும் என்ற தேவையின் பொருட்டு மட்டுமே அறிக்கைகளும், கண்டனங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்தந்த நாடுகளும் சரி, அமைப்புகளும் சரி அந்த ஒருவழிப்பாதையிலேயே பயணிக்கின்றன; செயற்படுகின்றன.

அதனாலேயே, முல்லைத்தீவில் கட்டவிழ்ந்து கொண்டிருக்கும் மனிதப் பேரவலம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை பாதிக்கப்படுவோருக்கும், அதற்குக் காரணமானோருக்கும் இரண்டு பக்கத் தாளம் போட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் போக்கோ, இதனைவிடவும் சற்று வேறுபட்டுக் காணப்படுகிறது. தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலம் இது என்பதால் பதவியில் உள்ள காங்கிரஸ், தமிழகத்தில் தனது வாக்கு வங்கியைச் சரித்துவிடக்கூடாது என்ற நலனைக் காட்டிக் கொண்டாலும், இலங்கை விடயத்தில் தனது நிலைப்பாட்டை மனிதாபிமானம் கருதியேனும் மாற்றுவதாக இல்லை.

இலங்கை அரசுடன் உள்ள நல்லுறவுகளுக்குப் பங்கம் ஏற்படுத்திவிடக் கூடாது என்ற கண்ணுடனேயே இந்தியா, முல்லைத்தீவின் மனிதாபிமான நெருக்கடியை நேற்றுவரையும் நோக்குகிறது; அணுகுகிறது.

ஈழத்தமிழர் படுகொலைகளால் துவண்டு போயுள்ள தமிழக மக்களை - அவர்களின் வாக்குகளை - எந்த வகையிலும் தனது ஆதரவிக்குரியதாக்க வேண்டும் என்ற ஒரே நோக்குடன் மட்டுமே செயற்படுகிறது.

இலங்கை மீது தனக்குள்ள செல்வாக்கை ஈழத்தமிழர் விடயத்தில் - அவர்களின் மனிதாபிமானப் பிரச்சினையில் - வீணாக நுழைத்து ஏன் தனது பிராந்திய நலனைக் கெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற மனப்போக்குடனேயே இந்தியா நழுவி, வழுவிச் செயற்பட்டு வருவது ஒன்றும் புதியதல்ல.

இதனை,

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு புதுடில்லியில் நடைபெற்ற அரசின் அவசர உயர்மட்டக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவும் அதனை வெளிவிவகார அமைச்சர் பிரணாப்முகர்ஜி வெளியிட்ட தொனியும் மிகத் துலாம்பரமாக எடுத்துக் காட்டின.

வன்னியில் தமிழர் கொலைகள் நிறுத்தப்படவேண்டும் என்று இலங்கை அரசிடம் வலியுறுத்துவது என்பதே அந்த முடிவு. அந்தத் தீர்மானம் இறுக்கமாகவும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாகவும் அமையவில்லை என்பதனைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இலங்கையில் தமிழ் மக்கள் கொலை செய்யப்படுவது குறித்து நாங்கள் மிகவும் மனவருத்தம் அடைகின்றோம். இந்தப் படுகொலைகள் கட்டாயம் நிறுத்தப்பட வேண்டும் - என்று அமைச்சர் பிரணாப் முகர்ஜி மெல்லியதாகக் கூறி முடித்துக் கொண்டார்.

இது விடயத்தில்கூட, மனித உயிர்கள் அழிந்து போகும் கொடுமையை நிறுத்துமாறு உரத்த தொனியில் சொல்ல இந்தியா விரும்பவில்லை.

மொத்தத்தில் -

தமிழக வாக்குகளுக்காக ஒரு பக்கத்தையும், மனிதாபிமான விவகாரத்தில்கூட உரத்த தொனியில் கூறத் தயங்கும் மறுபக்கத்தையும் கொண்டதே இந்தியா என்பது புலப்படுகிறது அல்லவா?

தானாடாவிட்டாலும் தசையாடும் என்பதனை புதுடில்லியில் இருந்து எப்போதுமே எதிர்பார்க்க முடியாது என்பதனையும் இது காட்டுகிறது.

இந்தியாவின் இந்தப் போக்கின் உள்ளே பல உள்ளார்த்தங்களும், உள்நோக்கங்களும் வெவ்வேறு வகையான சூக்குமங்களும் உண்டென்பதைப் புட்டுத்தான் காட்டவேண்டும் என்பதல்ல.....!

# புதுமாத்தளனிலிருந்து இடம்பெயர்ந்து வரும் மக்களிடையே தொற்று நோய் பரவும் ஆபத்து

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.24

புதுமாத்தளன் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வரும் மக்களிடையே தொற்று நோய்கள் பரவும் ஆபத்துகள் அதிகம் இருப்பதாகவும் இதன் காரணமாக உடனடியாக விசேட மருத்துவக் குழுவொன்றை வவுனியாவுக்கு அனுப்பியுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொற்று நோய் தொடர்பான அனுபவம் பெற்றவர்கள் மற்றும் குடும்ப சுகாதாரம் தொடர்பான மருத்துவக் குழு, போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு போஷாக்கு சிகிச்சைகளை அளிக்கும் விசேட பயிற்சிகளை பெற்ற தாதியர்கள் என 123 பேர் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

வடக்கில் இருந்து அழைத்து வரப்பட்டுள்ள நோயாளர்களில் அதிகமானவர்கள், வவுனியா மற்றும் திருகோணமலை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். புதிதாக வரும் நோயாளிகளை தங்க வைப்பதற்காக மன்னார் வைத்திய சாலையில் 5 புதிய நோயாளர் விடுதிகளை நிர்மாணிக்கும் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

வவுனியா, மன்னார், பதவியா, திருகோணமலை, கந்தளாய் ஆகிய வைத்தியசாலைகளுக்கு, அதிகளவான அத்தியாவசிய உயிர்காப்பு மருந்துகளை வழங்க உள்ளதாகவும் மருந்துப் பொருள்களை ஏற்றிய இரண்டு சுமை ஊர்திகளும், அம்புலன்ஸ் வண்டியும், மருத்துவ உபகரணங்களையும் வவுனியாவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறியுள்ளார். (50)

# வவுனியா, மன்னாரில் முகாம் அமைத்து 30 ஆயிரம் பேரைத் தங்க வைக்க ஏற்பாடு

கொழும்பு,ஏப்.24

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து பெரும் எண்ணிக்கையில் இடம்பெயர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ள மக்களை சிவில் மற்றும் இராணுவ அதிகாரிகள் படிப்படியாக வவுனியா நகரப்பகுதிக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு அழைத்து வரப்படுபவர்களைத் தெரிவு செய்யப்பட்டுள்ள 5 பாடசாலைகளிலும், மனிக்பாம் பிரிவு 1, பிரிவு 2 ஆகிய இடங்களிலும் தங்க வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதன்படி 30 ஆயிரம் பேர் வவுனியாவில் தங்க வைக்கப்படுவர் எனவும், அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் 30 ஆயிரம் பேரை மன்னார் மாவட்டத்தில் உள்ள 26 பாடசாலைகளில் தங்க வைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதன்கிழமை வவுனியாவுக்கு வந்திருந்த அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் அமீர் அலி தலைமையிலான உயர்மட்டக் கூட்டத்தில் இது குறித்துத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியா இலங்கைத் திருச்சபைத் தமிழ்க் கலவன் பாடசாலை, வவுனியா காமினி மகாவித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளையும், வசதிகளுடன் கூடிய வைத்தியசாலைகளாக மாற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானங்களையடுத்து, வவுனியா இலங்கைத் திருச்சபைத் தமிழ்க் கலவன் பாடசாலை உடனடியாக அதிகாரிகளினால் நேற்று வியாழக்கிழமை பொறுப் பேற்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களை ஓமந்தை போன்ற இடைத்தங்கல் நிலையங்களில் உடனடியாகத் தங்க வைப்பதற்குப் போதிய இடவசதியில்லாததால் அதிகாரிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும் எண்ணிக்கையில் வந்துள்ளவர்கள் தமது இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்கு உரிய வசதிகளின்றி திறந்த வெளியில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

## சுகாதாரக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.24

தென்மராட்சிப் பிரதேச உணவு கையாளும் நிலையங்களுக்கான சுகாதாரக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.24

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 3, தரம் 4 ஆகிய வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும் என வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

## பயிற்சி முகாம் டிறிபேக் கல்லூரியில்

யாழ்ப்பாணம், ஏப்.24

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலை மாணவர்களுக்கு இன்று தொடக்கம் மூன்று தினங்கள் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த பயிற்சி முகாம் சாவகச்சரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறுமென தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-227)

## இடம்பெயர்ந்தோரைத் தங்க வைக்க மேலும் 5 நலன்புரி நிலையங்கள்

வவுனியா,ஏப்.24

பாதுகாப்பு வலயத்திலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளை நாடி வருவோரைத் தங்கவைக்க மேலதிகமாக 5 நலன்புரி முகாம்களை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள தான்டிக்குளம் வித்தியாலயம், விபுலானந்த வித்தியாலயம், முள்ளியகுளம் வித்தியாலயம், வீரபுரம் வித்தியாலயம், ஆண்டிக்குளம் வித்தியாலயம் மற்றும் கட்டடப்பம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே இந்த நலன்புரி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களைத் தங்க வைப்பதற்காக வவுனியா மாவட்டத்தில் ஏற்கனவே இயங்கி வருகின்ற 15 நலன்புரி நிலையங்களுக்கு மேலதிகமாகவே இந்த 5 நலன்புரி நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன என்றும் அமைச்சுமேலும் குறிப்பிட்டுள்ளது. (50)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 12 | 25.04.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | அமாவாசை |
| | மு.ப.9.35 வரை |
| நட்சத்திரம்: | அச்சுவினி |
| | பி.ப.1.23 வரை |
| சுபநேரம்: | 03.00 - 04.30 |
| ராகுகாலம்: | 09.00 - 10.30 |

# யாழ். மாவட்டத்தில் 9 ஆயிரத்து 761 பேர் இதுவரை தேசிய அடையாளஅட்டை பெறவில்லை

### அரச அதிபரின் அறிக்கையில் தகவல்

யாழ்ப்பாணம் ஏப். 24

யாழ்.மாவட்டத்தில் இது வரை 9 ஆயிரத்து 761பேர் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கவில்லையென்று யாழ் மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலகர்களிடம் இருந்து கிடைத்த தகவல்களின் படி இத்தரவு திரட்டப்பட்டுள்ளது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டையின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு பதினாறு வயது பூர்த்தியடைந்தவர்கள் தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தேசிய அடையாள அட்டையினை பெற்றுக்கொடுப்பதில் கிராம சேவையாளர்களும் பிரதேச செயலர்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அரச அதிபர் கேட்டுள்ளார்.

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களின் விவரம் பிரதேச செயலக ரீதியாக வருமாறு

யாழ்ப்பாணம்- 565, நல்லூர்-239, கோப்பாய் - 2280, கரவெட்டி -555,பருத்தித்துறை-55, சண்டிலிப்பாய்-1274,சங்கானை-447,உடுவில் -2100,தெல்லிப்பழை-1012, வேலணை- 266, சாவகச்சேரி-331, காரைநகர்- 112, மருதங்கேணி-82,நெடுந்தீவு- 211, ஊர்காவற்றுறை- 232. (50- 09)

# ஜனாதிபதியின் விசேட நடவடிக்கைப் பிரிவு அலுவலகம் வவுனியாவில் திறந்து வைப்பு

வவுனியா, ஏப்.24

ஜனாதிபதியின் விசேட நடவடிக்கைப் பிரிவு வவுனியாவில் நேற்று முன்தினம் முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்களின் உடனடித் தேவைகளைத் துரிதமாகப் பெற்றுக்கொடுப்பதற்காக ஜனாதிபதியின் விசேட நடவடிக்கைப் பிரிவொன்று, வவுனியா பிரதிக் காவற்றுறை மா அதிபர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் முதல் இயங்க ஆரம்பித்துள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் இந்தப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் சப்ரகமுவ முதலமைச்சர் கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவுக்கு சென்று விசேட கூட்டம் ஒன்றை நடத்தியிருந்தார். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து, வவுனியாவுக்குச் சென்றுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு தேவையான நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில், இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளது. அதில் வடமாகாண ஆளுநர் டிக்சன் தேஹெல பண்டாரவும் கலந்துகொண்டார். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுத் திட்டங்கள் குறித்த பேச்சுக்கு ஈரான் இணங்கத் தவறின் பொருளாதாரத் தடை

## ஹிலாரி கிளின்ரன் தெரிவிப்பு

வாஷிங்டன், ஏப். 24

''ஈரான் தனது சர்ச்சைக்குரிய அணுத் திட்டங்கள் தொடர்பான பேச்சுகளுக்கு இணங்க வேண்டும். மறுக்கும் பட்சத்தில், அதன் மீது மேலும் இறுக்கமான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும்.''

- இவ்வாறு அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் செயலாளர் ஹிலாரி கிளின்ரன் எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்ற வெளிவிவகாரக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார். அதன்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

''இப்பேச்சுகளை மேற்கொள்வதற்கான சாதகமான சூழ்நிலையை அமெரிக்கா தற்போது உருவாக்கி வருகின்றது. இப்பேச்சுகளை மேற்கொள்ள ஈரான் மறுத்தாலோ, இம்முன்னெடுப்புகள் தோல்வியுற்றாலோ அது பாரதூரமான விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேரிடும். அதன் மீது இறுக்கமான தடைகள் விதிக்கப்படும்'' என்றும் கூறினார்.

''ஈரானின் சர்ச்சைக்குரிய அணுத்திட்ட விவகாரத்தை, இராஜதந்திர ரீதியாக அணுக அமெரிக்கா முன்வந்துள்ளது. இது வெற்றியளிக்காவிட்டால், இயன்ற வரையிலான இறுக்கமான பொருளாதாரத் தடைகளை ஈரான் மீது விதிக்க அது பின்வாங்காது'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

''இராஜதந்திர அணுகுமுறையை மேற்கொள்ளவே அமெரிக்கா முனைகிறது. அதேவேளை, இவ்விவகாரம் தொடர்பாக ஈரான் மீது இறுக்கமான பொருளாதாரத் தடைகளை விதிக்கவே அநேக நாடுகள் முன்வந்துள்ளன. அமெரிக்கா தமது முயற்சி தோல்விகண்டால், இந்த நாடுகளின் நிலைப் பாட்டையே தானும் ஏற்கும்'' என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

''ஈரான் விடுக்கும் அச்சுறுத்தலும், அதன் சர்ச்சைக்குரிய அணுத்திட்ட விவகாரமும் சர்வதேச விவகாரங்களுக்கான பேச்சுகளில் முக்கியத்துவம் பெறுகின்றன. இப்பேச்சுகளைப் பொறுத்தமட்டில், அமெரிக்கா முழுமையாக பங்கெடுத்துக் கொள்ளும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஈரான் தனது அணுத்திட்டங்கள் சமாதான நடவடிக்கைகளுக்கானவை என தெரிவித்து வருகிறது. எனினும், மேற்கத்தேய நாடுகள் இதனை நம்பவில்லை. ஈரான் இப்போர்வையில், அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட முனைகிறது என அவை குற்றஞ்சாட்டி வருகின்றன.

''இவ்விவகாரம் தொடர்பாக, உலக வல்லரசுகளுடன் காத்திரமான பேச்சுகளை மேற் கொள்ள ஈரான் தயாராகவே உள்ளது'' என ஈரான் புதன்கிழமை, அறிக்கையொன்றின் வாயிலாகத் தெரிவித்திருந்தது. அதேவேளை, அதன் அணுத்திட்டங்கள் தொடருமென்றும் அது அதில் அழுத்தமாகக் குறிப்பிட்டிருந்தது.

அதேவேளை, இவ்விவகாரம் தொடர்பாக, கலந்துரையாடுவதற்கு, அனைத்துத் தரப்புகளுக்கும் ஏற்ற ஒரு முறையினை தாம் முன்வைக்கவுள்ளார் என கடந்த வாரம் ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதிநிஜாத் தெரிவித்திருந்தார். எனினும், அதன் பின்னர் எத்தகைய தகவலும் இது வரை வெளியாகவில்லை.

# தலிபான்களிடம் அதிகாரங்களை பறிகொடுக்கின்றது பாகிஸ்தான்

வாஷிங்ரன், ஏப். 24

''பாகிஸ்தான் தன் அதிகாரத்தை தலிபான்களிடம் பறிகொடுத்து வருகிறது. பாகிஸ்தானின் பல பகுதிகளை தலிபான்கள் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது'' என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் குற்றஞ் சாட்டினார்.

வாஷிங்ரனில் நடைபெற்ற காங்கிரஸ் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு அவர் பேசினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ''பாகிஸ்தானில் தற்போது உருக்கொண்டுள்ள நிலை, உலக பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது'' என்றார்.

''வட-மேற்குப் பாகிஸ்தானில் சுவாத் பள்ளத்தாக்கையும், இதர எல்லைகளையும் தீவிரவாதிகள் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்கள். பாகிஸ்தானின் நீதி முறைமை ஊழல்கள் மலிந்தது. கிராமப்புறங்களிலும், எல்லைப் பிராந்தியங்களிலும் அதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரமே உள்ளது'' என்றும் ஹிலாரி குறிப்பிட்டார்.

'' பாகிஸ்தானில் தலைதூக்கியுள்ள நிலை எமது நாட்டினதும் உலகத்தினதும் பாதுகாப்புக்கு ஒரு பெரும் அச்சுறுத்தலாகும். உயிராபத்துக்கான அச்சுறுத்தலுமாகும். பாகிஸ்தான் அரசு, அதிகாரத்தைத் தலிபான்களுக்கும், தீவிரவாதிகளுக்கும் தாரைவார்த்துக் கொடுக்க முன்வந்துள்ளதோ என எண்ணத் தோன்றுகிறது'' என்றும் அவர் தெரிவித்தார்.

''அரசின் கொள்கைக்கு எதிராக பாகிஸ்தான் மக்களே குரல் கொடுக்கவேண்டும். தீவிரவாதிகளுக்கும், தலிபான்களுக்கும், அல்-குவைதாவுக்கும், பயங்கரவாத வட்டத்துக்குள் உள்ள கூட்டுகளுக்கும் மென்மேலும் எல்லைகளை பகிர்ந்தளிக்க இசைவான கொள்கையையே அரசு கடைபிடிக்கின்றது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''பாகிஸ்தானின் நிலை படுமோசமடைந்துள்ளது. இது குறித்து, அந்த நாடே விழிப்பாக இருக்கவேண்டும். கட்டவிழ்க்கப்பட்டுள்ள பயங்கரவாதிகளுக்கும், அரசைக் கவிழ்ப்பதற்கு தருணம் பார்த்துக் கொண்டிருக்கும் தீவிரவாதிகளுக்கும் பாகிஸ்தான் அரசே உறுதுணையாக உள்ளது. ஊக்கமளிக்கும் சக்தியாகவும் உள்ளது'' என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

கியூபா, ஈரான் ஆகிய நாடுகள் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கும் ஹிலாரி கிளின்ரன் பதில்கள் அளித்தார்.

# சமாதான உடன்படிக்கை மீள் பரிசீலனை; தலிபான்களுக்கு பாக். பிரதமர் எச்சரிக்கை

இஸ்லாமாபாத், ஏப். 24

''பாகிஸ்தானின் ஸ்வாட் பகுதியில் அமைதி ஏற்படாவிட்டால், தலிபான்களுக்கும் அரசுக்குமிடையே எட்டப்பட்டுள்ள சமாதான உடன்படிக்கை மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்'' என பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஜா கிலானி தெரிவித்துள்ளார்.

''இந்த உடன்படிக்கையை அடுத்து, தலிபான்கள் ஸ்வாட் பகுதியை அடுத்துள்ள பர்ணர் மாவட்டத்தையும் ஆக்கிரமித்துள்ளார்கள். இதனால், பதற்ற நிலை உருவாகியுள்ளது. தலிபான்கள் தங்களின் எதேச்சதிகார கெடுபிடிகளை கட்டவிழ்க்கத் தொடங்கியுள்ளார்கள்'' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''ஸ்வாட், பர்ணர் ஆகிய இரு பகுதிகளிலும் அமைதி ஏற்பட வேண்டும். மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கும், இயல்பு நிலைக்கும் குந்தகம் ஏற்படக் கூடாது. இதுவே எமது எதிர்பார்ப்பு. அமைதி ஏற்பட வில்லையானால், தலிபான்களுடன் செய்துகொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கை மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படும்'' என்றும் பிரதமர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

''தீவிரவாதத்தை ஒரு தனிநபராலோ, ஒரு கட்சியாலோ கட்டுப்படுத்திவிட முடியாது. அனைத்துக் கட்சிகளும் தீவிரவாதத்துக்கு எதிராக ஒன்று திரளவேண்டும்'' என்றும் பிரதமர் யூசுப் ரஜா கிலானி அறைகூவல் விடுத்துள்ளார்.

# தென்னாபிரிக்கத் தேர்தலில் ஆளும் தரப்பு முன்னணியில்

ஜொஹனஸ்பர்க், ஏப். 24

தென்னாபிரிக்க பொதுத் தேர்தலில்



இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளில் ஆளுங் கட்சியான ஆபிரிக்க தேசிய காங்கிரஸே முன்னணி வகிக்கின்றது. இதுவரை இது 63 சதவீத வாக்குகளை ஈட்டியுள்ளது.

தென்னாபிரிக்காவின் நாடாளுமன்றமே ஜனாதிபதியை தெரிவு செய்கிறது. ஆளும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் வெற்றி உறுதியாகிவிட்டது. இதன் தலைவர் ஜுமா, எதிர்வரும் மேயில் ஆட்சி அமைப்பார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தென்னாபிரிக்க நாடாளுமன்றத் தேர்தல் புதன்கிழமை நடந்தது. வாக்களிப்பு அதிகாலை 7 மணிக்கு ஆரம்பமாகியது. இரவு 9 மணிக்கு முடிவடைந்தது. இதையடுத்து, வாக்கு எண்ணிக்கை உடனடியாகத் தொடங்கியது.

இத்தேர்தலில் 2 கோடியே 30 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தார்கள். இவர்களில் 80 சத வீதமானோர் வாக்களித்துள்ளனர் என தேர்தல் அதிகாரிகள் மதிப்பீடு செய்துள்ளார்கள்.

தென்னாபிரிக்காவில், 1994 ஆம் ஆண்டு நிறத்துவேஷ வெள்ளையர் ஆட்சி தோற்கடிக்கப்பட்டது. அது முதல் 3 தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. தற்போது 4 ஆவது தேர்தல் நடைபெற்றுள்ளது.

கடந்த மூன்று தேர்தல்களிலும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியே வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. தற்போது 4 ஆவது முறையாகவும் ஆளுங் கட்சியே வெற்றியை அண்மித்துள்ளது.

இம் முறை முன்னரை விட எதிர்க்கட்சிகளிடமிருந்து கடும் சவால் ஏற்பட்டிருந்தது. ஊழல்கள், வறுமை, குற்றச் செயல்களின் பெருக்கம் ஆகியவற்றாலும் மக்கள் விரக்தியடைந்துள்ளார்கள் என்ற குற்றச்சாட்டு ஆளுங் கட்சி மீது சுமத்தப்பட்டிருந்தது.

## உலக அரங்கில்

# பாக். ஸ்வாட் பகுதிக்குள் தலிபான்கள் ஆழ ஊடுருவல்!

இஸ்லாமாபாத், ஏப். 24

பாகிஸ்தானிலுள்ள ஸ்வாட் பகுதியை கைப்பற்றிய தலிபான்கள், வடமேற்கு எல்லைப்புற மாநிலத்திலுள்ள மற்ற பகுதி களுக்கும் முன்னேறுகிறார்கள். அரச அலு வலகங்களுக்குள் புகுந்து அங்கிருந்த வாகனங்கள், கணனி ஆகியவற்றை கொள்ளையடித்துள்ளார்கள்.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்திலுள்ள ஸ்வாட் பள்ளத்தாக்கு பகுதியில் செல்வாக்குச் செலுத்தி வந்த தலிபான் தீவிரவாதிகள் அரசுடன் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இதைத் தொடர்ந்து அவர்கள் மீதான தாக்குதலை பாகிஸ்தான் இராணுவமும் நிறுத்திக் கொண்டது. அத்துடன் சிறையிலிருந்த தீவிரவாதி களும் அரசால் விடுவிக்கப்பட்டனர். மேலும் அந்தப் பகுதியில் இஸ்லாமியச் சட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த செயற்பாடுகளால் துணிவு கொண்ட தலிபான்கள், மெதுவாக இஸ்லாமாபாத் அருகேயுள்ள பர்ணர் மாவட்டத்துக்குள் புகுந்து, அதை ஆக்கிரமித்துள்ளனர்.

அங்கிருந்து வெளியேறுமாறு அரசு தலிபான்களை பழங்குடி இனத் தலைவர்கள் மூலம் கேட்டுக் கொண்டது. எனினும், அதற்கு அவர்கள் மறுத்து விட்டார்கள்.

பர்னர் மாவட்டத்தில் தலிபான்கள் [illegible] சோதனைச்சாவடிகளை ஆங்காங்கே அமைத்துள்ளனர். சந்தைகள், கிராமங்கள், நகரங்கள் அகியவற்றில் தீவிரவாதிகள் சுதந்திரமாக ரோந்துச் சுற்றி வருகிறார்கள்.

அதோடு அரச அலுவலகங்களுக்குள் புகுந்து அங்கு நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களையும், கணனிகளையும், ஜெனரேட்டர்களையும், உணவுப் பொருள்களையும் தலிபான்கள் கொள்ளையடித்துள்ளனர்.

தலிபான்களுக்கு எதிராக பழங்குடி இனத் தீவிரவாதிகளை வளர்த்துவிட்ட அரசியல்வாதிகள், வர்த்தக பிரமுகர்கள் ஆகியோர் தலிபான்களுக்கு அஞ்சி பர்ணர் மாவட்டத்தை விட்டு ஓடிவிட்டார்கள். பர்ணர் முன்பு மதச்சார்பற்ற அவாமி தேசிய லீக் கட்சியின் செல்வாக்குக்குட்பட்ட மாவட்டமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

பர்னர் மாவட்டத்திலுள்ள பல நகரங்களில் தலிபான் தீவிரவாதிகள் பதுங்கு குழிகளை தோண்டி வருகிறார்கள். இம் மாவட்டத்திலுள்ள அனைத்து தாலுகா நகரங்களையும் அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டார்கள்.

அதோடு தலிபான் தீவிரவாதிகள், வடமேற்கு மாநிலத்தின் ஸ்வாபி, மலாக்காண்ட், மர்டான் ஆகிய நகரங்களை நோக்கியும் முன்னேறி செல்கிறார்கள். மர்டான், அம்மாநில முதலமைச்சர் அமீர் ஹைதர் கானின் சொந்த ஊராகும்.

இதற்கிடையில், தலிபான்கள் ஸ்வாட் பகுதியை கைப்பற்றியது போல, பாகிஸ்தான் முழுவதையும் கைப்பற்றிவிடக் கூடும் என முன்னாள் பிரதமரும், முஸ்லிம் லீக் கட்சித் தலைவருமான நவாஸ் ஷெரீப் கவலை தெரிவித்துள்ளார்.

# பாக்., ஆப்கானில் தலிபான்களின் செல்வாக்கு அதிகரிப்பது குறித்து அச்சம்

வாஷிங்ரன், ஏப். 24

''பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் தலிபான்களின் செல்வாக்கு அதிபயங்கரவேகத்தில் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. தலிபான்களை தோற்கடிக்க சர்வதேச சமூகம் ஒன்றுதிரள வேண்டும்'' என அமெரிக்கா கேட்டுள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார திணைக்களத் தொடர்பாளர் ரொபர்ட் வுட் பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசுகையில், ''தலிபான்களை தோற்கடிப்பதற்காக இராணுவ ரீதியிலும், தூதரக மட்டத்திலும், ஏனைய வகையிலும் நாம் அழுத்தம் கொடுக்க முயற்சித்து வருகிறோம். தலிபான்களைத் தோற்கடிப்பது எளிதான காரியம் அல்ல. அது பெரிதும் கடினமானது'' என்றார்.

''தலிபான்களைத் தோற்கடிப்பதுதான் ஒபாமா நிர்வாகத்தின் முன்னுள்ள மிக முக்கியமான கடமையாகும். தலிபான்கள் உலக அமைதிக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக இருந்துவருகிறார்கள்'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ''தலிபான்கள் தங்களை எதிர்க்கும் கிராமத்து முதியவர்களின் காதுகளையும், மூக்குகளையும் அறுத்து வருகிறார்கள். பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். [illegible] தோற்கடிக்கப்பட [illegible] போக்கு தடுக்கப்பட வேண்டும்'' என்றும் ரொபர்ட் வுட் தெரிவித்துக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு; போதனா வைத்தியசாலை விடுதிகளில் இடநெருக்கடி

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ்.போதனா வைத்தியசாலையின் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது.

இந்த நோயாளர் அதிகரிப்பால் விடுதிகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பாக முதலாம் இல்ல விடுதி முதல் 10 இலக்க விடுதி வரை நோயாளர்கள் அதிகரித்திருப்பதால் சிலர் விடுதிகளின் நடைபாதைகளில் இருந்தும் சிகிச்சை பெறும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் இருந்தும் தினமும் வைத்தியசாலைக்குப் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

இதனை விட காய்ச்சல் உட்பட மற்றும் பொது நோய்களுக்கு இலக்காகி சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பும் இந்த நெருக்கடிக்குக் காரணம் என்று கூறப்பட்டது. (50-224)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் ஏற்புத்தடை மருந்து இல்லை

யாழ்ப்பாணம், ஏப்.24

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஏற்புத் தடை (ரொக்சைட்) ஊசி மருந்து முடிவடைந்துள்ளதால் இந்த மருந்தினை தனியார் கடைகளில் வாங்கி வருமாறு நோயாளர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

தனியார் கடைகளிலும் இந்த ஊசி மருந்தின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள உடல் அவயவங்களை இழந்தவர்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் உதவி

யாழ்ப்பாணம், ஏப்.24

வன்னிப்பகுதியிலிருந்து வந்தவர்களில் உடல் அவயவங்களை இழந்தவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் யாழ்.ஜெய்ப்பூர் செயற்கைப் பொருள் நிறுவனத்தின் மூலம் உதவிகளை வழங்கவுள்ளனர்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அவயவங்களை இழந்தவர்களுக்கு சக்கர நாற்காலிகள், செயற்கை அவயவங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நலன்புரி நிலைய அதிகாரிகளுடன் அழைத்துச் செல்லப்பட்டு உரிய சிகிச்சைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் மீண்டும் அதே இடங்களில் கொண்டு வந்து விடப்படுகின்றனர் எனவும் கூறப்பட்டது. (50-207)

## இலங்கை அதிபர் சேவைப் பதவி உயர்வுகளை 2ஆம் தவணை முடிவதற்குள் வழங்க ஏற்பாடு

அச்சுவேலி, ஏப்.24

இலங்கை அதிபர் சேவை பதவி உயர்வுகளை இந்த வருடம் பாடசாலை இரண்டாம் தவணை முடிவடைவதற்கு முன்னர் வழங்கி முடிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்காக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு வழக்குகளின் தீர்ப்பை கல்வி அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

"இலங்கை அதிபர் சேவை தரம் 2:II இலங்கை அதிபர் சேவை தரம் 3 உள்ளிட்ட பதவி உயர்வுகளை குறித்தகால இடைவெளியில் நிறைவுசெய்து பாடசாலைகளின் அதிபர் ஆளணியை பொருத்தமான முறையில் நிறைவு செய்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்திருப்பதாக "கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜெயந்த இலங்கை தரம்பெற்ற அதிபர் சேவை சங்க தூதர் குழுவிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கை அதிபர் சேவை தரம் 2:II க்கு போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு பரீட்சைக்கு தோற்றிய் 17ஆயிரத்து 243 பேரையும் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து போட்டிப் பரீட்சை + நேர்முகப் பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் ஆயிரத்து 918 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

நியமனம் வழங்கப்பட்ட முறையினால் தங்களது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்ற வகையில் இரண்டு வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்குகள் மே மாதம் 4ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அதிபர் சேவை 2:II இல் ஏற்பட்ட தடங்கல்களினால் இலங்கை அதிபர் சேவை வகுப்பு-3 போட்டிப் பரீட்சைக்கு தோற்றியவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவில்லை. அத்துடன் அதிபர் சேவை 2:II இல் நியமனம் பெற்றவர்களுக்கு பாடசாலைப் பொறுப்புக்களும் வழங்கப்படவில்லை.

போட்டிப் பரீட்சை மூலமான தெரிவு மற்றும் திறமை, சேவை, மூப்பு அடிப்படையிலான பதவி உயர்வுகள் அனைத்தையும் இந்தத் தவணையில் வழங்குவதற்கு பூர்வாங்க ஏற்பாடுகளைக் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது. (50-11)

## சாரணர் சங்கத்தின் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.24

வடமாகாண சாரணர் சங்கம் ஆரம்பத்திற்கான உரித்தாளர்கள் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8.45 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதேவேளை மேற்படி சாரணர் சங்கத்தின் முதியோர் சாரணர் விருது வழங்கும் நிகழ்வு அன்றைய தினம் பிற்பகல் 1.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடமாகாண சாரண ஆணையாளர் அறிவித்துள்ளார். (201)

## வன்னியிலிருந்து வரும் உறவுகளைக் காண கொடிகாமத்துக்குப் படையெடுக்கும் மக்கள்

யாழ்ப்பாணம், ஏப்.24

தென்மராட்சி நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தமது உறவுகளைப் பார்வையிட பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கொடிகாமத்திற்குப் படையெடுத்து வருகின்றனர்.

வன்னியில் உள்ள தமது உறவுகளும் இங்கு வந்திருக்கலாம் என்ற எண்ணத்தில் பொதுமக்கள் பஸ்கள் மற்றும் ஆட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றில் கொடிகாமத்துக்குப் படையெடுத்த வண்ணமுள்ளனர்.

உறவுகளைப் பார்க்க வரும் பொதுமக்கள் அவர்களுக்கான உணவுப் பார்சல்கள் மற்றும் சிற்றுண்டிவகைகளையும் எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் காலை சிலர் தமது உறவுகள் தங்கவைக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் மதில்களுக்கு மேலால் அவர்களைச் சந்தித்து உணவுப் பார்சல் களைக் கையளித்ததாகவும் பின்னர் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் வந்து சேர்ந்ததையடுத்து பாடசாலைக்கு அண்மையில் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

## முல்லைத்தீவிலிருந்து படகில் வந்த பெண் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணம்

வடமராட்சி, ஏப்.24

முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதியிலிருந்து படகு ஒன்றில் பருத்தித்துறை நோக்கி வந்த குடும்பப் பெண் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தார்.

கடந்த திங்கட்கிழமை நடந்த இச்சம்பவத்தில் வல்வெட்டித்துறை ஊறணியைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் ஜெயவதனா (39 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

இவரது மரணம் குறித்து பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் பருத்தித்துறைமுனை கடற்பகுதியில் வைத்து விசாரணை நடத்தி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (50-236)

## கசிப்பு வைத்திருந்த நால்வருக்கு 3 லட்சத்து 90 ஆயிரம் ரூபா அபராதம்

தென்மராட்சி, ஏப்.24

தென்மராட்சிப் பிரதேசத்தில் சட்ட விரோத கசிப்பு வைத்திருந்த நால்வருக்கு 3 லட்சத்து 90ஆயிரம் ரூபாவும் மோட்டார் சைக்கிளில் அளவுக்கு அதிகமாக மரக் குற்றிகள் கொண்டு சென்ற இருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 10 ஆயிரம் ரூபாவும் சாவகச்சேரி நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் மீசாலை மேற்கு, கொட்டாம்பிட்டி, மட்டுவில் தெற்கு ஆகிய பகுதியில் நடத்திய திடீர் பரிசோதனையின் போது சட்டவிரோத கசிப்பு வைத்திருந்த நால்வர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போது ஒருவருக்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து, அபராதத் தொகை செலுத்தத் தவறின் 30 மாத சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையிலும் 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

மற்றொருவருக்கு ஒருலட்சத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தொகை செலுத்தத் தவறின் 25 மாத சாதாரண சிறையும் மூன்றாவது நபருக்கு 80 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தவறின் 20 மாத சாதாரண சிறையும் நான்காவது நபருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் வித்து தவறின் 10 மாதச் சிறைத் தண்டனையும் விதித்தார்.

மோட்டார் சைக்கிள்களில் அளவுக்கு அதிகமாக மரக்குற்றிகள் கொண்டுசென்ற இவருக்கு எதிரான வழக்குகளில் இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து செலுத்தத் தவறின் தலா 5 மாத சாதாரண சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. (50-207)

## இ.வே.செல்வரத்தினத்தின் அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.24

நாவலர் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் அமரர் இ.வே.செல்வரத்தினத்தின் அஞ்சலி நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு உடுப்பிட்டி நாவலடியிலுள்ள மாணவர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு ஓய்வுபெற்ற தட்டச்சாளர் வே.சுந்தரம் தலைமையில் நடைபெறும். (204)

## இடம்பெயர்ந்த மக்களைத் தங்க வைக்க வலி.கிழக்குப் பாடசாலைகள் தயார் நிலையில்

யாழ்ப்பாணம், ஏப்.24

இடம்பெயர்ந்து வரும் மக்களை வலி. கிழக்குப் பிரதேச பாடசாலைகளிலும் தங்க வைப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கென நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகிய பிரதானபாடசாலைகளை தயார் நிலையில் வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (50-224)

## தையல், மனையியல் கண்காட்சிப் போட்டி முடிவுகள்

நல்லூர், ஏப்.24

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் நடத்திய மாவட்ட மட்டத்திலான மகளிர் அபிவிருத்தி நிலையங்களுக்கிடையிலான தையல், மனையியல் கண்காட்சியில் முதலாவது இடத்தை கோப்பாய் பிரதேச மகளிர் அபிவிருத்தி நிலையமும், இரண்டாவது இடத்தை சாவகச்சேரி பிரதேச மகளிர் அபிவிருத்தி நிலையமும், மூன்றாவது இடத்தை பருத்தித்துறை பிரதேச மகளிர் அபிவிருத்தி நிலையமும் பெற்றுக்கொண்டன. (50-111)





உள்ளூராட்சி சபைகளில் வருமானம் சேகரித்தல் குறித்த பயிற்சி நெறியினை யாழ்ப்பாணம் பிராந்திய ஆணையாளர் திருமதி பத்மினி சிவலிங்கம் ஆரம்பித்து உரையாற்றுவதையும்-
பயிற்சி நெறியில் கலந்து கொண்ட உள்ளூராட்சி சபைகளின் உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சக் கட்டமாகத் தொடர்ந்து நீளும் யுத்தம் சர்வதேச அரங்கில் பிரதிபலிப்பது என்ன?

**வரலாற்று ரீதியாக தொடர்ந்து வரும் இலங்கையின் இனப்பிரச்சினையின் உச்சக் கட்ட நிகழ்வாக தொடரும் இந்த யுத்தம், சர்வதேச அரங்கில் எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதை ஆய்வு பூர்வமாக விளக்கும் விதத்தில் அமைகிறது இக்கட்டுரை.**

**''அஜித் பெரகும் ஜயசிங்க'' என்பவரால் எழுதப்பட்ட இக்கட்டுரை ''ராவய'' பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது.**

**அதன் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.**

இலங்கையென்ற எமது நாடு நாற்புறங்களிலும் கடலால் சூழப்பட்டிருந்தாலும், கடுமையான ஊடகக் கட்டுப்பாடொன்றின் ஊடாகத் தகவல்கள் அங்கும் இங்கும் செல்வது கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், இலங்கை அரசு, சர்வதேச அரசியல் என்ற விடயத்தில் எந்தளவுக்கு நுட்பமாகச் செயற்பட்டுவந்தாலும் கூட, அதிர்வையும் அதிர்ச்சியையும் தரும் யுத்தத்தின் ஓசை மற்றும் மரணத்தின் தீய்ந்த நாற்றத்தை உலகம் தெரிந்துகொள்வதைக் கட்டுப்படுத்தி விடுவதென்பது, இன்றைய புறச்சூழலில் சாத்தியமற்றதாகும் - சிரமம் மிக்கதாகும்.

உண்மையில், உலகமயமாகியுள்ள இந்த நவீன உலகில் வாழும் இனங்கள், ஒருவரோடொருவர் அந்தளவுக்குத் தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொண்டுள்ளனர். ஒருவரோடொருவர் கருத்துக்களால்

> மஹிந்த ராஜபக்ஷ அரசு, யுத்தத்தை முன்நகர்த்திச் செல்லும் தனது செயற்பாட்டில் நடந்துகொண்டுள்ள விதமானது விடுதலைப்புலிகள் அமைப்பை மட்டுமல்லாது, இந்தியா முதல் அமெரிக்கா வரையான நாடுகளையும் கூட தடுமாற்றத்துக்கு உள்ளாக்கிவிட்டுள்ளது என்று கூறினால், அது தவறானதல்ல.

மோதிக்கொள்கின்றனர். விசேடமாக இலங்கை அமைந்துள்ள கேந்திர மையத்தில் காணப்படும் அரசியல் ரீதியிலான யுத்தமயம் மற்றும் பொருளாதாரச் சிறப்பியல்பு நிலை, காரணமாக இத்தீவு வரலாற்றுக் காலம் முழுவதிலும் உலகத்தோடு சம்பந்தப்பட்டிருந்தது என தொல்பொருள் விஞ்ஞானச் சான்றுகள் வெளிச்சம் போட்டுக்காட்டி நிற்கின்றன.

இதன் காரணமாகவே இலங்கையில் வாழும் இனங்களுக்கிடையிலான பிரச்சினை முற்றுமுழுவதுமான உள்நாட்டுப் பிரச்சினையேயென அர்த்தப்படுத்தி நிற்பது மற்றும் ''தனித்தனியாக மோதிக்கொண்டு'' பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதென்பது சிரமம் மிக்கதாகியுள்ளது. அதற்கமைய இலங்கை வாழ் இனங்களுக்கிடையிலான பிரச்சினையுடன் பின்னிப் பிணைந்ததான சர்வதேச முன்னணியொன்றும் எப்போதுமே இருந்து வந்துள்ளது.

> தமிழ்த் தேசியவாத எழுச்சி அலையானது அதற்கு அப்பாலும் பயணித்து இலங்கை அரசுக்கு எதிராக மனித அழிப்புக்குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு எத்தனங்களை மேற்கொண்டு வருகிறது.

அதேபோன்று சர்வதேச சக்திகளின் மத்தியில் இந்நாட்டுச் செயல்மார்க்கங்களின் நியாயத்தன்மையைச் சுட்டிக்காட்டி விடும் வேலைத்திட்டங்களையும் எப்போதும் காணமுடிந்தது.

இலங்கையில் இடம்பெற்றுவரும் இன்றைய யுத்தத்தைப் பொறுத்தவரையில் சர்வதேச முன்னணி அரங்கத்தில் இடம்பெற்றுவரும் போராட்டங்களாக, சர்வதேச ஊடகங்களின் கவனத்தைத் தம்பக்கம் ஈர்த்தெடுத்தல், ஐ.நா. அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புகளுக்குக் காரணிகளைத் தெளிவுபடுத்தல் மற்றும் ராச்சியங்களின் கொள்கைகள் மீது அழுத்தங்களை விடுத்தல் ஆகிய முக்கிய கருமங்கள் உள்ளடங்கியுள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ அரசு, யுத்தத்தை முன்நகர்த்திச் செல்லும் தனது செயற்பாட்டில் நடந்துகொண்டுள்ள விதமானது விடுதலைப்புலிகள் அமைப்பை [illegible]டுமல்லாது, இந்தியா முதல் அமெரிக்கா வரையான நாடுகளையும் கூட தடுமாற்றத்துக்கு உள்ளாக்கி விட்டுள்ளது என்று கூறினால், அது தவறானதல்ல.

சிங்களத் தேசியவாதம் என்ற நியாயக் கோட்பாட்டு அலையின் மூலம் மேற்குலக ஆதிக்கம் ஆழமாக வினாவுக்குள்ளாக்கப்பட்டு அரசுக்கு வழங்கப்பட்ட ஆத்மபலம் பயன்படுத்திக்கொள்ளப்பட்டு இலங்கை அரசு, மரபுவழி யுத்தத்தின்போது, வெகுவாக மரபுவழியற்ற விதத்தில் செயற்படுவதற்கான திறனாற்றலைப் பெற்றது. அந்தவகையில், மஹிந்த ராஜபக்ஷ அரசு, மனித உரிமைகள் மற்றும் போர்ச் சட்டங்கள் தொடர்பான ஒருங்கிணைந்த தரப்புக்களின் அங்கீகரிப்புக் கட்டுக்கோப்புத் தொகுதிக்கு வெளியில் நின்றே போர் - அரசியல் வட்டத்தை வடிவமைத்துக்கொண்டது.

இந்த மரபுவழியற்ற மரபுவழி யுத்தம் மற்றும் சர்வதேச அரசியலுக்கு இடையிலான தொடர்பு மற்றும் கர்ஜனையை நுட்பமாகக் கையாள்வதற்கும் கூட, இலங்கையரசு இற்றைவரையிலும் திறனாற்றல் பெற்றுள்ளது.

சர்வதேச அரசியல் வளர்ச்சிகள் குறித்து எப்போதுமே விழிப்புடன் செயற்பட்டுவரும் அரசு, அவசியமெனக் கருதும் சந்தர்ப்பத்தில் திடீரெனத் தலையிட்டுச் செயற்படுவது தொடர்பாக சித்து விளையாட்டு வீரர்களையும் முன்னாயத்தமாக ஆயத்தப்படுத்தி வைத்துள்ளது.

அந்தவகையில், இலங்கை அரசு, ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசொன்றே [illegible] வாதத்தை மற்றும் தமிழீழ விடு[illegible]லைப்புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பொன்றே என்ற முத்திரையை அதிகபட்ச அளவில் பயன்படுத்திக்கொள்வதற்கு அரசுக்கு வாய்ப்பமைந்தது. அதேசமயத்தில் அரசியல், பொருளாதார, யுத்தமய ஆகிய அனைத்து விதங்களிலும் கூடியபட்சம் மரபுவழியற்ற வித்தில் செயற்பட்டு வருவதுடன் தாம் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச பிரகடனத்தின் ஓர் அங்கமே என்பதாகவும் மற்றும் விடுதலைப்புலிகள் அமைப்பு, முறைமைக்கு எதிரான அமைப்பொன்றே எனவும் தெளிவுபடுத்துவதே அரசின் சர்வதேச அரசியல் உத்தியாகியது.

தமிழ்த் தேசியப் போராட்டத்தின் தலைமைத்துவத்தைத் தனதாக்கிக் கொண்டுள்ள விடுதலைப்புலிகள் அமைப்பைச் சர்வதேச அரசியல் அரங்கில் கூட, தோல்வியுறச் செய்வதற்கும் அரசு திறமைபெற்றது. அதுமட்டுமல்லாது, சர்வதேச அரசியலை மிக நுட்பமாகக் கண்காணித்து அவசியமெனக் கருதிய சந்தர்ப்பத்தில் நல்லெண்ண [illegible] பிள்ளையா[illegible] சந்தர்ப்பத்தில் மிகக்கடும் பிரதிபலிப்புக்கள் ஊடாக சர்வதேச அழுத்தங்களைச் செயலிழக்கச் செய்து விடுவதிலும், அரசு திறன் பெற்றிருந்தது. இதற்கு நல்லதொரு உதாரணத்தை இங்கு முன்வைக்க முடியும்.

அதாவது, இனங்களுக்கிடையிலான பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவை, தேவையெனக் கருதிய சந்தர்ப்பங்களில் - அரசியல் தீர்வொன்றை எட்டும் முயற்சியில் அரசு காத்திரமாகவே செயற்படுகிறது என்பதைக் காட்டிக்கொள்வதற்காகப் பயன்படுத்திக்கொள்ளும் விதமே அந்த உதாரணமாகும்.

அந்தவிதமாக, மார்க்ஸிஸவாதிகள், சமுதாய ஜனநாயக வாதிகள், தாராளமயவாதிகள், இனவாதிகள் மட்டுமல்லாது, தமிழ்த் தீவிராவதிகளினதும் பாராட்டுக்களைக்கூடத் தனது உச்சப்பயன் தொடர்பாக ராட்சத சக்தியாக ஒருங்கிணைத்துக்கொண்ட மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகத்தின் பரந்துபட்ட அரசியல் திறனாற்றலின் முன்னால் விடுதலைப்புலிகள் அமைப்பானது கடுகளவு பரிமாணத்தில் சிறுத்துப் போய் விட்டுள்ளது.

இத்தனைக்கும் உலகமட்டக் கட்டுக்கோப்பு வியூகத்தினால் நிராகரிக்கப்பட்டு வீசியெறியப்பட்டுள்ள, இன மேலாதிக்கவாதத்தைத் தனது நாட்டில் நடமாடவிட்டுள்ள மற்றும் இலங்கைவாழ் தமிழ் மக்களது கோரிக்கைகளில் தென்படும் தர்ம நியாயத்தன்மை தொடர்பான சர்வதேச அங்கீகாரமும் அதிகரித்து வருமொரு பின்புலத்திலேயே அரசு இவை அனைத்தையும் செயற்படுத்துவதற்குத் திறனாற்றல் பெற்றிருந்தது என்பதே இங்குள்ள சிறப்பம்சமாகும்.

எவ்வாறான போதிலும், இன்றைய - இந்தக் கணத்தில் இலங்கையரசுக்கு எதிராக சர்வதேச மட்டங்களில் அனுகி அலசப்பட்டுவரும் இன அழிப்பு மற்றும் போர்க்குற்றங்கள் என்ற குற்றச்சாட்டுக்களாவன, சட்ட ரீதியாகக் களமிறங்கக்கூடிய உச்சம் பெற்றவைகளேயாகும்.

> “எவ்வாறான போதிலும், இன்றைய - இந்தக் கணத்தில் இலங்கையரசுக்கு எதிராக சர்வதேச மட்டங்களில் அனுகி அலசப்பட்டுவரும் இன அழிப்பு மற்றும் போர்க்குற்றங்கள் என்ற குற்றச்சாட்டுக்கள், சட்ட ரீதியாகக் களமிறங்கக்கூடிய உச்சம் பெற்றவைகளேயாகும்.”

ஐ.நா. அமைப்பின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை, இலங்கை அரசினதும் விடுதலைப்புலிகள் அமைப்பினதும் சில செயற்பாடுகள் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் செயற்பாடுகள் தொடர்பான சர்வதேச சட்டத்தை மீறிச் செல்கின்றன என, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு கூன் கூட்டத்தின் இடைநடுவில் வெளிப் படுத்திய கருத்து வெளிப்பாட்டை அக் கூட்டத்தின் ஓர் உச்சக் கட்டமாகவே கருத முடியும்.

அவ்வாறு அக்கூட்டத்தில் குற்றச்சாட்டுக்கள் முன்னெழுந்த வேளையில், இலங்கை அரசு விமல்வீரவன்ஸ ஊடாக அதற்கான தனது பிரதிபலிப்பை வெளிப்படுத்தியது. அதாவது அக்கூற்றுக்கு எதிராக மக்களை வீதியில் இறக்கிப் போராட்டம் நடத்தப் போகின்றார் எனவும் கொழும்பிலுள்ள ஐ.நா. அமைப்பின் அலுவலகம் சுற்றிவளைக்கப்படும் என்றும் அபாய [illegible]க்கப்பட்டது.

[illegible], தமிழ்த் தேசியவாத எழுச்சி அலையானது அதற்கு அப்பாலும் பயணித்து இலங்கை அரசுக்கு எதிராக மனித அழிப்புக்குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு எத்தனங்களை மேற்கொண்டு வருகிறது. மேலும் 1948 ஆம் ஆண்டில் பிரேரணை முன்வைக்கப்பட்டு 1951 இல் ஐ.நா. சபை மூலம் நிறைவேற்றப்பட்ட இலங்கை அரசினாலும் 1950 ஆம் ஆண்டு ஒக்டோபர் 12 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித அழிப்புக் குற்றங்களைத் தடுக்கும் மற்றும் தண்டனை வழங்கும் பிரகடனத்தின் இரண்டாவது விதிக்கு அமைய மனித அழிப்பு என்பது எந்தவிதத்திலானது என்பது அர்த்தப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

அதாவது, தேசிய, இன ரீதியிலான அல்லது மதம் சார்ந்த தரப்பொன்று முழுமையான அல்லது 'ஒரு பகுதியாக அழித்தொழித்துவிடப்படும் நோக்கிலான செயற்பாடுகள் எவையென்பது கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது, அக்குழுவின் - தரப்பின் உறுப்பினர்கள் கொலை செய்யப்படுவது, பாரதூரமான விதத்தில் உடல் ரீதியிலான மற்றும் மன ரீதியிலான பாதிப்புக்களை ஏற்படுத்துவது, முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அத்தரப்பு பௌதீக ரீதியில் அழிவுற்றுப் போகும் நிலைப்பாடொன்றை உருவாக்கி விடுவது,

அத்தரப்பின் மத்தியில் குழந்தைகள் பிறப்பதைத் தடுத்துவிடுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வது மற்றும் அத்தரப்பினது பிள்ளைகளை வல்வந்தமாக வேறும் தரப்புகளிடத்தில் கைமாற்றிவிடுதல் என்பவையாகும்.

இந்தச் சர்வதேச சட்டத்தின் கீழ் முதற்தடவையாக குற்றவாளியாக்கப்பட்டவர், ருவாண்டாவின் டாபா நகரத்தின் மேயராகப் பதவிவகித்த ஹூட்டூ இனத்தைச் சேர்ந்தவரான 'ஜீன் போல் அகாயெசு' ஆவார். 1998 ஆம் ஆண்டிலேயே மேற்படி சட்டத்தின் கீழ் அவர் குற்றவாளியாக்கப்பட்டார். அதற்கமைய, மேற்படி குற்றச்சாட்டுக்களின் கீழ் இலங்கைக்கு எதிராகக் கருத்தாடலொன்று ஆரம்பமாவதும் கூட தோல்வியொன்றேயாகும்.

> “இலங்கையில் வாழும் இனங்களுக்கிடையிலான பிரச்சினை முற்றுமுழுவதுமான உள்நாட்டுப் பிரச்சினையேயென அர்த்தப்படுத்தி நிற்பது மற்றும் தனித்தனியாக மோதிக்கொண்டு பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதென்பது சிரமம் மிக்கதாகியுள்ளது.”

விடுதலைப்புலிகள் அமைப்பானது தேசிய விடுதலைப்போராட்டத்துக்கு அப்பால் சென்று, முறைமைக்கு விரோதமான யுத்த - அரசியல் இயக்கமொன்றாகத் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டுள்ளமையானது, தமிழர் போராட்டத்துக்கு சர்வதேச முன்னணி அரங்கில் பாரதூரமானதொரு சிக்கலாகிப் போயுள்ளது.

அதேபோன்று இனங்களின் பிரச்சினையில் தெளிவாகத் தெரியும் விதத்தில் - தெளிவுபடுத்திக் காட்டப்பட்டுள்ள அதிதீவிர சிங்கள மேலாதிக்கவாதம் மற்றும் சிறுபான்மை இனச் சமூகங்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வது தொடர்பாகக் காட்டப்பட்டுள்ள விருப்பின்மை, இலங்கையின் அரசுக்கும் கூட, சர்வதேச அரசியல் அரங்கத்தில் அதே அளவுக்குச் சாதகமற்றதாகியுள்ளது என்பது கருத்தில் கொள்ளப்படத்தக்கது. ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ இலக்கியம் காட்டும் வாழ்க்கைநெறி

சைவ இலக்கியங்களான பெரியபுராணம், கம்பராமாயணம், கந்தபுராணம் ஆகியவை தமிழ்மக்கள் வாழ்க்கை நெறியை பிரதிபலிக்கும் நன்றியுணர்வு, மானஉணர்வு, உறுதியுணர்வுடன் கூடிய வீரநெஞ்சங்களை சிறப்புற எடுத்துக் கூறுவதைக் காணமுடிகிறது.

*''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்நன்றி கொன்ற மகற்கு''*

வரமும் வாழ்வும் வழங்கிய சிவனின் மைந்தனாகிய குமரனை நன்றி மறந்து எதிர்த்து போராடியவன் சூரபன்மன். அத்தன்மையே அவனை அழித்தது எனக் கந்தபுராணம் கூறுகின்றது.

*''நன்றொரு பயன்தனை உதவினோர் மனம்*
*கன்றிட வொருவினை கருதிச் செய்வரேல்*
*புன்றொழில அவர்க்கு முன்புரிந்த நன்றியே*
*கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ''*

ஆகவே எவர் செய்த நன்றியையும் நாம் மறக்கக்கூடாது. முருகனின் விசுவரூப தரிசனத்தை கண்ணுற்ற சூரபன்மனுக்கு ஏற்பட்ட மெய்ஞானத்தால் கந்தப் பெருமானைத் தொழுதிடல் வேண்டுமென அவனது நன்றிமறவா மனம் எண்ணியது. ஆனால் மானம் அதனைத் தடுத்தது. அதனாலே சூரபன்மனுக்கு வாழ்வும் வரமும் அழிவுற்றது.

கம்பராமாயணத்தில் கும்பகர்ணனை இராமனிடம் சரணடையுமாறும் விபீஷணன் கேட்டபோது மறவீரன் மானத்தை முன்வைத்து ''போர்க்கோலம் செய்து விட்டார்க்கு உயிர்கொடாது அங்கு போகேன்; கும்பிட்டு வாழ்கிலேன்யான்'' என்றான் மாவீரன். கும்பகர்ணனின் மான உணர்வு அங்கே எடுத்துக் காட்டப்படுகிறது.

தேவாரப் பதிகங்கள் மூலம் தமிழ் மொழித் திறனையும் மேன்மையையும் புரந்தவராகிய தமிழ்மொழித் தலைவன் திருநாவுக்கரசு சுவாமிகள், திருக்கைலாயத்திலே சிவனை வந்திக்க வேண்டுமென்ற சிந்தையுடன் கைலை நோக்கி நடந்து செல்கிறார். கால்கள் புண்ணாகி கைகளை ஊன்றி நடந்தார். கைகளின் முன் பகுதி சிதைந்தன எனினும் தமது மன வைராக்கியத்தால் மார்பினால் தவழ்ந்தார். மார்பும் சிதைந்தது அன்பு பொங்க இறைவனைக் காண வேண்டுமென்ற தீராக் காதலால் புரண்டு, புரண்டு சென்றார். அந்நிலையில் உடல் செயலற்றது. இறைவன் முனிவர் வடிவில் அப்பரடியில் தோன்றினார். நீர் யார்? எங்கே செல்கிறீர் முனிவர் வினவ, திருக்கைலாய மலையைத் தரிசிக்க செல்கிறேன் என்றார் அப்பர் பெருமான்.

ஞானக்கதிர்

அப்போது முனிவர் கைலாயக்காட்சி தேவர்களாலும் காணமுடியாது மக்களுக்கும் காணற்கரியது; நீர் திரும்பிச் செல்லும் என்றார்.

உடன் அடிகளார்,

*''ஆளு நாயகன் கயிலையிலிருக்கை கண்டல்லால்*
*மாறு மிவ்வுடல் கொண்டு மீள்கேன்''*

என மனவைராக்கியத்துடன் கூறுகின்றார் - இறக்கப்போகின்ற இவ்வுடல் கயிலைக் காட்சியைக் கண்டு மாளட்டும்; அதனைக் கண்டல்லால் திரும்பமாட்டேன் என உறுதிபடக் கூறுகிறார். முனிவராகத் தோன்றிய இறைவன் அவர்முன்தோன்றி நாவுக்கரசே எழுந்திரு'' எனக் கூற நாவுக்கரசர் எழுந்து திகழொளிமேனியுடன் தோன்றினார். இறைவன் திருவையாற்றிலே தமது திருக்கைலாயக் காட்சியைக் காட்டினார்.

நாவுக்கரசர் பக்தி வைராக்கியம் பூவுலகிலேயே கயிலாயத்தைக் காட்டியது.

ஆகவே நமது வாழ்க்கை, இலட்சியம், தன்னம்பிக்கை, பக்தி, வைராக்கியத்துடன் கூடிய இறையுணர்வுடன் கூடியவையாக விளங்குதல் அவசியம்.

கோப்பாய். சிவஸ்ரீ சோ.மு.பிரணதார்த்திஹரக்குருக்கள்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.24

மாவிட்டபுரம் - வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத்திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

இந்த நிகழ்வுகளுக்கு பக்தர்கள் செல்வதற்கு காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை படையினர் அனுமதியளித்துள்ளதால், அடியார்கள் காலை 8.30 மணிக்கு முன் தெல்லிப்பழை தடை முகாமுக்கு வருகை தருமாறும், வாகன வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

* * *

சுழிபுரம், ஏப்.24

பொன்னாலைப் பிள்ளையார் ஆலயத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

இந்த ஆலயத்திற்கு புதிய இராச கோபுரம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (204-28)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.24

தாவடி, கொக்குவில் ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

# பொதுமக்களுக்கு சேதம் ஏற்படுவதை அரசு - புலிகள் தவிர்க்க வேண்டும்

## நோர்வே கோரிக்கை



இலங்கையில் இடம்பெறும் மோதல்களில் பொதுமக்களுக்கு ஏற்படும் சேதங்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், அரசு மற்றும் விடுதலைப்புலிகள் பொதுமக்களுக்கு சேதங்கள் ஏற்படுவதை நிறுத்த வேண்டும் எனவும் நோர்வே அரசு கேட்டுள்ளது.

இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் புதிய மோதல்களில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு அல்லது காயமடைந்துள்ளனர். இது தவிர்க்கப்பட வேண்டும் என நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் கடந்த புதன்கிழமை விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அரசு தானாகவே பொதுமக்களுக்கான பாதுகாப்பு வலயம் ஒன்றை அறிவித்தது. இந்தப் பாதுகாப்பு வலய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு அல்லது தாக்குதலில் பெருமளவு மக்கள் கொல்லப்பட்டு அல்லது காயமடைந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.


விடுதலைப்புலிகள் தாம் தமிழ் மக்களுக்காகப் போரிடுகின்றனர் எனக் கூறுகின்றனர். பாதுகாப்பு வலயத்தில் இருந்து யார் வெளியேற விரும்புகிறார்களோ அவர்களை வெளியேற அனுமதிக்க வேண்டும் எனவும் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளக்கூடாது எனவும் சொல்ஹெய்ம் கேட்டுள்ளார்.

ஏப்ரல் 20ஆம் திகதி முதல் 82 ஆயிரம் பொதுமக்கள் தமது கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு வந்துள்ளனர் என இலங்கை பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. அதேவேளை 20 ஆயிரம் பொதுமக்கள் பாதுகாப்பு வலய பகுதியில் பணயமாக வைக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் குறிப்பிட்டுள்ளது. அதேவேளை நோர்வே 2 கோடி குரோனர்களை மனிதாபிமான நிவாரணப் பணிகளுக்காக வழங்கியுள்ளது எனவும் மோதல் நடைபெறும் பகுதிகளில் தன்னார்வ பணியாளர்களை அனுமதிக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (03)

## வணக்க ஸ்தலங்களில்



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய தேர்த்திருவிழாவின் போது தேர் வீதி வலம் வரும் காட்சி.
(படம்: ஸ்ரீமுருகன்)




இளவாலை ஆனைவிழுந்தான் விக்கின விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கும்பாபிஷேக பிரதம குருவாக மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய சிவஸ்ரீ பரமேஸ்வர ஜெயக்குமாரக் குருக்கள் கிரியை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.



சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயத்தில் த.பிரதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற சிவராத்திரி விழாவில் சிறந்த முறையில் இசை, நாடகத்தினை நடத்திய மாணவர்கள் ஆலய பிரதம குருவினால் கௌரவிக்கப்பட்டனர். பரிசில் பெற்ற மாணவர்களையும் இந்நிகழ்வில் கலந்துகொண்டோரையும் இப்படத்தில் காணலாம்.



[illegible] சிதம்பர விநாயகர் ஆலய சங்காபிஷேக பூர்த்தி உற்சவத்தில் சுவாமி வீதி உலா வருவதைப் படத்தில் காணலாம்.
(படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னியிலிருந்து வரும் மக்களுக்காக மேலும் சில பாடசாலைகள் கையேற்பு

யாழ்ப்பாணம், ஏப்.24

வன்னிப்பகுதியில் இருந்து இதுவரை 4,325 பொதுமக்கள் கப்பல் மூலம் அழைத்து வரப்பட்டுள்ள நிலையில், இன்னமும் அதிக எண்ணிக்கையான பொதுமக்கள் அடுத்துவரும் தினங்களில் வந்து சேர்வார்கள் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு பொதுமக்கள் வரும் பட்சத்தில், அவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வடமராட்சி பகுதியில் 5 பாடசாலைகளும், வலிகாமம் பகுதியில் 2 பாடசாலைகளும் அந்தந்தப் பகுதி பிரதேச செயலர்களினால் கையேற்கப்பட்டுள்ளன.

(அ-04)


கற்பக விநாயகர் துணை

**ஏழ முடியா ஏழாண்டு**

மண்ணில் மகிழ 19.04.1927 — மண்ணில் நெகிழ 11.04.2002



**அமரர் வைரவநாதன் கந்தையா**

(ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட்)

திதி: சதுர்த்தசி

அப்பா!
ஆலமரம் போல் நீங்கள் வழி காட்ட, அதில் ஆயிரம் கருடன்
உமை ஏமாற்றி அதில் இளைப்பாற, உமையிழந்து கூடு கலைந்து
நாம் தடுமாற, வானிலிருந்து எம்மைக் காக்கும் தெய்வமே!
உமது கடைக்குட்டி துன்பத்தில் உழன்று திசை மாறி அலைந்த
போது நல்ல நிழல் காட்டி வாழ வைத்தீர்கள் மல்லாகம்
நீலியம்பனையில் ஆலமரத்தைச் சோலைவனமாக்கும்
முதலியம்மன் அருட்பிரவாகத்தை எமக்களித்தீர்கள்
சிறுண்டிருக்கும் உமது மகன் சின்ராசுவின் பிறந்த
தினத்தை உமக்கு நினைவு படுத்துகின்றேன். உமது ஆத்மா
சாந்தி பெறவும், மறுபிறப்புண்டேல எம்முடன் சேர்ந்து வாழும்
பாக்கியம் கிடைக்கவும் நயினை நாக பூசணியினதும், கற்பக
விநாயகரினதும் அருளாசியை வேண்டி முதலியம்மன்
ஆலயத்தில் இன்று மலர்தூவிப் பணிகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

**உமது கடைக்குட்டி.**

(சி/558158)



**மூன்றாம் ஆண்டு நினைவலைகள்**



அமரர்

**தங்கராஜா கமலவோஜன் (கமல்)**

(யா/ தொ.நு.கல்லூரி பாதுகாப்பு உத்தியோகத்தர்)

பிறப்பு: 13.09.1969 இறப்பு: 26.04.2006

திதி: சதுர்த்தசி (24.04.2009)

நெஞ்சினிலே நினைவு முகம்
நினைவில் தெரிவது ஆசைமுகம்
நெஞ்சிருக்கும் வரை நாம் மறவோம்- உங்களை
என்றென்றும் எம்முடன் ஒன்றாய்
உயிருடன் கலந்திருப்பீர்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்......
பிரியமான
மனைவி,
குடும்பத்தினர்.

கண்ணன் கோயில் வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(84634)


## பெரியாழ்வார் ஆச்சிரமத்தில்

வடமராட்சி,ஏப்.24

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் இடம்பெற்றுவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 26 ஆம் திகதகி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''பெரிய புராணத்தில் பக்தி'' என்னும் தலைப்பில் கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரி ஆசிரியர் ப.செல்வவிநாயகம் சொற்பொழிவாற்றுவார்.

(50-236)

## ஹற்றன் நஷனல் வங்கி கிளை பருத்தித்துறையில்

வடமராட்சி,ஏப்.24

ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை ஒன்று அடுத்த மாதத்தில் பருத்தித்துறை நகரில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை-தும்பளை வீதியில், இரண்டாம் குறுக்குத்தெருச் சந்தியில் இக்கிளைக்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டு பூர்த்தியடைந்துள்ளது. தற்போது இதற்கான மின்இணைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

வடமராட்சிப் பிரதேசத்தில் ஹற்றன் நஷனல் வங்கியின் இரண்டாவது கிளை இதுவாகும்.

(50-236)

## சுயதொழில் முயற்சி கொடுப்பனவு வழங்கல்

நவாலி, ஏப்.24

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சுயதொழில் முயற்சிக்கு விண்ணப்பம் செய்த நால்வருக்கு வடமாகாண சமூக நலத்துறை அமைச்சினால் அவர்களின் கொடுப்பனவுக்கான காசோலைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பின்வரும் பெயர் முகவரியுடையவர்களை உடன் வந்து சமூக சேவை உத்தியோகத்தர் அருந்தவராசாவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

யே.புஸ்பராணி (அம்பாள் கோவிலடி, மாதகல்), சா.தவமலர் (புலவர் வீதி, நவாலி வடக்கு), கு.கிருஸ்ணகுமாரி (சாவற்கட்டு, சுதுமலை), சி.நகுலேஸ்வரி(5ஆம் கட்டை, மானிப்பாய்).

(50-200)

## மந்திகைப் பொதுச்சந்தையின் கட்டடப் பணிகள் ஸ்தம்பிதம்

வடமராட்சி, ஏப்.24

மந்திகையில் 74 இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் பொதுச்சந்தைக் கட்டட வேலைகள் மாதக்கணக்காக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

புதிய சந்தைக் கட்டடம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் பல மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு, அதன் முதலாம் கட்ட வேலைகள் நிறைவு பெற்றுள்ளன.

இரண்டாம்கட்ட வேலைகளை விரைவாக ஆரம்பிப்பதற்கு தேவையான நிதியை அனுமதிப்பதில் வடக்கு மாகாண உள்ளுராட்சித் திணைக்களம் காலதாமதம் காட்டுவதாலேயே இச்சந்தைக்கான இரண்டாம்கட்ட வேலைகளை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள பொதுச் சந்தையில் போதிய வசதிகள் இன்மையால் தாங்கள் சிரமப்படுவதாகவும், அதனால் புதிய சந்தையை விரைவாக கட்டி முடித்துத் தருமாறு மந்திகை பொதுச் சந்தை வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(50-236)


**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

தோற்றம் 02 ✱ 06 ✱ 1937



மறைவு 25 ✱ 03 ✱ 2009

**திருமதி கிருஷ்ணன் அன்னப்பிள்ளை**

(முறிவு, நெரிவு வைத்தியர் மனைவி)

பெற்று வளர்த்து பேணியெமைக் காத்து
அகிலத்தில் உயர்ந்திட அரும்பணி செய்த அம்மாவே!
முப்பத்தொரு நாள்கள் முடிவடைந்து விட்டாலும்
அகலாதுன் நினைவு அகிலத்தில் அம்மாவே!

பிள்ளைகள்

திரு.கி.சின்னராசா(லண்டன்), திரு.கி.தங்கராசா(பிரான்ஸ்), திரு.கி.பிரபாகரன்(ஹொலண்ட்), திருமதி சிவபாதம் ராதா(பிரான்ஸ்), திருமதி பவனேந்திரன் பரமேஸ்வரி, திருமதி சின்னராஜா ஈஸ்வரி.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
(புத்தூர் சந்தி).

(84618)



**ஆறாம் வருட நினைவுகள்**



பிறப்பு 20 . 05 . 1927

இறப்பு 24 . 04 . 2003

**அமரர் தொம்மை பிலிப்பு**

ஆண்டுகள் ஆறு சென்றிடினும்
ஆறவில்லை எம் துயரம்
அவனியில் எம்மை ஆளாக்க
அயராது பாடுபட்டுழைத்த எம் தந்தையை
நன்றி உணர்வுடன் நினைக்கின்றோம்
நித்தமும் உங்கள் நினைவில்
நெஞ்சுருகி வாழ்கின்றோம்
நின் ஆன்மா சாந்தி பெற
இறையருள் வேண்டுகின்றோம்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(84652)

நீங்கா நினைவில்
குடும்பத்தினர்.



**அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**



கடந்த 26.03.2009 வியாழக்கிழமை இறைபதம்
அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் ஆறுமுகம் சந்திரன்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (25.04.2009) சனிக்கிழமை முற்கபல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்று நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் தாங்களும் குடும்ப சமேதரராகக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு எமது துயரில் பங்கு கொண்டோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

209/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

(84842)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- '' அன்பினால் உலகையே வெல்ல முடியும் ''

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்

**BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA (Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)**

**17.04.2009 Continuity.....**

**The Syllable** உயிரெழுத்து உச்சரிப்பு.

A Unit of Sound that contains a Vowel is a Syllable.
ஒரு பகுதிக்குரிய அசைவைக்கொண்ட ஓர் உயிரெழுத்துச் சொல் ஓர் உயிரெழுத்து உச்சரிப்பாகும்.

**Two Groups of Words** சொற்களின் இரு வகைகள்.

Words in English can be classed in two groups.
ஆங்கிலத்தில் சொற்கள் இரு பகுதிகளாக வகுக்கப்படும்.

01. Words that have only a single syllable. They are called "monosyllable" words.
சொற்களுக்கு ஓர் உயிரெழுத்து உச்சரிப்பு இருக்குமாயின் அவை ''தனி உயிரெழுத்து உச்சரிப்பு'' சொற்களாகும்.

**Monosyllabic words.**
**தனியான உயிரெழுத்து உச்சரிப்புச் சொற்கள்.**
Eg:- a, am, and, are, as, at, be, been, but, by, can, could, did, do, does, for, from, had, has, have, he, her, him, his, how, I, if, in, is, its, may, me, might, more, most, must, my, of, off, on, one, ones, our, shall, should, since, so, some, than, that, the, their, them, there, they, through, till, to, was, we, were, what, when, where, which, while, who, whose, why, will, with, would, you, your.

02. Words that have more than one syllable. They are called "Polysyllable" words.
சொற்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட உயிரெழுத்து உச்சரிப்புக்கள் இருக்குமாயின் அவை பல உயிரெழுத்து உச்சரிப்புச் சொற்கள் என அழைக்கப்படும்.

**The way the English language flows.**
**ஆங்கில மொழியறிவின் அபரிமிதமான வளர்ச்சிப்பாதை.**

The English Language is a semi – Musical Language when English man speaks, his speech does not come out in the proper way. You can always notice three things in his speech.

ஆங்கில மொழியானது ஒரு இடைப்பட்ட சங்கீத மொழி ஆகும். ஓர் ஆங்கிலேய மனிதன் கதைக்கும்போது அவனுடைய பேச்சு ஒருபோதும் சரியான ஒலியுடன் வெளி வராது. நீங்கள் எப்பொழுதும் அவனுடைய பேச்சில் மூன்று விடயங்களை அவதானிக்கலாம்.

01. Not all syllables in a word or word group are uttered with the same force or effort. Some syllables are said with greater force or effect, and so those syllables come out more loudly than the other syllables in that word or word group.

எல்லா உயிரெழுத்து உச்சரிப்புச் சொற்களும் சொற் கூட்டங்களும் உச்சரிக்கப்படும் போது ஒரே அளவான ஒலி தொனிப்பதில்லை. சில உயிரெழுத்து உச்சரிப்புக்கள்மிகக்கூடிய ஓசையுடைய வையாகவும், சில உயிரெழுத்து உச்சரிப்புக்கள் கூடிய சத்தத்துடன் வேறு உயிரெழுத்து உச்சரிப்பைவிட மாறுபட்டும் இருக்கும்.

02. The length of time in uttering a syllable in one word is often not the same as the length of the time spent in uttering a syllable in another word (in the same word group). Thus the syllables in some words in a word group are ut tered more quickly than the syllables in the other words in the same word group. Thus the syllables in some words in a word group are drawled out. The syllables in the other words in the same word group are said very quickly.

ஒரு உயிரெழுத்து உச்சரிப்பை உச்சரிக்கும் நேரமும் வேறொரு உயிரெழுத்து உச்சரிப்பை உச்சரிக்கும் நேரமும் சமமாக இருக்கா. (ஒரே சொற்றொகுதியில்) உயிரெழுத்து உச்சரிப்பானது சில சொற்களுக்கும் சில சொற் தொகுதிகளுக்கும் மற்றைய உயிரெழுத்து உச்சரிப்பைவிட விரைவாக உச்சரிக்கக் கூடியதாக இருக்கும். ஆகவே உயிரெழுத்து உச்சரிப்பு சில சொற்களுக்கும் சொற் றொகுதிகளுக்கும் கூடிய நேரத்தை இழுத்துவிடும். உயிரெழுத்து உச்சரிப்பானது ஒரே சொற்றொகுதியில் உள்ள சில சொற்கள் விரைவாக உச்சரிக்கப்பட்டுவிடும்.

03. The way in which the syllables in some words are uttered more quickly than the syllable in the other words that is remarkable. The syllables uttered with greater force or effort come out more loudly (than the other syllable) at approximately equal intervals of time. This regular succession gives a unique rhythm to the English speech.

உயிரெழுத்து உச்சரிப்பின்போது சில சொற்கள் மிக விரைவாக உச்சரிப்பு அசையை கொடுக்கும் முறையானது மிகவும் சிறப்பான தாகும். இவ் உயிரெழுத்தை உச்சரிக்கும் முறை ஒரு நிகழ்ச்சி நடந்தது போன்றிருக்கும். உயிரெழுத்து உச்சரிப்பானது மிகக்கூடிய ஓசை யுடன் மிகச் சத்தமாக வெளிவரும் போது சமமான நேரம் உச்சரிப்புக்கு எடுக்கும். இவ்வாறு சமமான வேகத்துடன் உச்சரிக்கும் முறையானது ஒரு விந்தையான ஓசை நயத்தை ஆங்கிலப்பேச்சுமொழியில் தரும்.

01. Thus the level of the flow of the English speech is not flat. The English speech flows almost like a wave. It goes up (↑), comes down (↓) again goes up (↑) come down (↓)and flows on like that. Every second (or in less time than that), the loudness of the speech goes up (↑) and comes down (↓). Yes the loudness of the speech keeps on going up and coming down every second rhythmically. This is simplified rough way of describing what happens; but it will give you an idea of how the English speech flows.

ஆங்கிலப் பேச்சு வளமான நேரான ஓசையுடையதல்ல. ஆங்கிலப் பேச்சுவளம் எப்போதும் ஒரு அலைவரிசை போலவே இருக்கும். இது மேலே போகும் (↑) கீழே வரும் (↓) திரும்ப மேலே போகும் (↑) கீழே வரும்(↓). இதே போன்ற வளம் அமையும். ஒவ்வொரு நிமிடமும் பேச்சு ஒலியானது மேலே போவதும் (↑) கீழே வருவது மாக (↓) இருக்கும். ஆம், இப் பேச்சு ஒலிவளம் மேலே போவதும் கீழே வருவதுமாக இருக்கும். ஆம், இப்பேச்சு ஒலிவளம் ஒவ்வொரு நிமிடமும் மேலே போவதும் கீழே வருவதுமாக இருக்கும். இவ் ஒலியானது, ஓசை நயமிக்கதாக இருக்கும். இது மிகவும் இலகுவானதாகும்.

02. Polysyllabic words - பல உயிரெழுத்து உச்சரிப்புக்கள்.
Words that have more than one syllable. They are called polysyllabic words.
சொற்களில் ஒன்றுக்கு மேற்பட்ட உயிரெழுத்து உச்சரிப்பு இருக்குமாயின் அவை பல உயிரெழுத்து உச்சரிப்புக்கள் எனச்சொல்லப்படும்.

Thus the word "Father" contains two syllables "Fa", "ther". The word "Necessary" contains four syllables "Ne" "ces" "SA" and "ry". On the other hand the word "cut" contains only one sylable. Thus we can say that a syllable is a whole word or part of word that contains a vowel. It is the vowel that is the 'Nucleus' of a syllable.

ஆகவே "Father" எனும் சொல் "Fa" "ther" எனும் இரு உயிர்எழுத்து உச்சரிப்புக்களைக் கொண்டதாகும். Necessary எனும் சொல் "Ne" "ces" "sa" "ry" எனும் உயிரெழுத்து உச்சரிப்புக்களைக் கொண்டதாகும். இன்னொரு பக்கத்தில் "cut" எனும் சொல்லுக்கு ஒரு உயிரெழுத்து உச்சரிப்பு மட்டுமே உண்டு. ஆகவே உயிரெழுத்து உச்சரிப்பானது, ஒரு பூரணமான சொல்லையோ அல்லது பகுதிச்சொல்லையோ உடைய ஓர் உயிர் எழுத்தைக் கொண்டதென நாம் கூற முடியும். இந்த உயிரெழுத்தானது, ஆழமான அடிப்படை கொண்ட உயிரெழுத்து அசைவாகும்.

ஆங்கிலம் பேசவிரும்புவோர் Syllables க்கு ஏற்ற முறையில் உச்சரிக்கப் பழகவேண்டும். நாங்கள் அதிகமாக ஆங்கில வார்த்தைகளுக்கு நேரடி உச்சரிப்புக்கள் எடுப்பதே ஆங்கில உச்சரிப்புக்கள் பிழையாவதற்கு காரணமாகும். சில சொற்களை நாம் உச்சரிக்கும்போது தமிழில் இப்படி அமையும் என உச்சரிப்பதே பிழை ஏற்பட காரணமாகும். இதனைத் தவிர்ப்பதற்கு நாம் றேடியோவிலும் ரீவியிலும் ஆங்கிலச் செய்திகளை செவிமடுப்பது அவசியமாகும்.

உச்சரிப்பு சரியாக அமைவதற்கு சொற்களை உச்சரிப்பை பிரிப்பதை (Syllable) என அழைப்பர். அதற் கிணங்க முக்கியமான சொற் களை கீழே காணலாம். இவை Day to Day Conversation நாளாந்த பாவனை வாக்கியங்களில் வரும். இதனைப் பலமுறை படித்து பழக்கப்படுத்திக் கொள்ளவும்.

| சொற்கள் | பிரிப்பு | உச்சரிப்பு | கருத்து |
|---|---|---|---|
| 01. Abduction | Abduc - tion | அப்டக்சன் | கடத்தி செல்லுதல் |
| 02. Ability | Abil - ity | ஏபிலிட்டி | உள்ளத்திறமை |
| 03. Abnormal | Abnorm - al | அப்நோர்மல் | இயற்கைக்கு விரோதமான |
| 04. Absolutely | Ab - solutely | அப்சொலூட்லி | தன்னிச்சையாக |
| 05. Accident | Ac - cident | அச்சிடன்ற் | எதிர்பாராத நிகழ்ச்சி |
| 06. Accommodative | Accomm - odative | அக்கோமடற்றிவ் | இடமளிக்க்கூடிய |
| 07. Accordance | Accord - ance | அக்கோடென்ஸ் | இணங்க |
| 08. Accordingly | Accord - ingly | அக்கோடிங்கிலி | ஒத்தாற்போல |
| 09. Accumulate | Accum - ulate | அக்கும்லேட் | செல்வத்தைக் குவி |
| 10. Accurate | Acc - urate | அக்குரேட் | சரியான |
| 11. Achievement | Achieve - ment | அச்சிவ்மன்ட் | சாதனையை நிறைவேற்றல் |
| 12. Acknowledge | Acknowl - edge | அக்கநொலிஜ் | ஒத்துக்கொள்ளல் |
| 13. Activity | Activ - ity | அக்டிவிட்டி | சுறுசுறுப்பான |
| 14. Additional | Addi - tional | அடிசினல் | மேலதிகமான |
| 15. Administration | Administra - tion | அட்மினிஸ்றேஷன் | நிர்வாகம் |
| 16. Advantage | Advan - tage | அட்வான்ரிஜ் | மேம்பட்ட நிலை |
| 17. Adventure | Adven - ture | அட்வென்சர் | துணிகரச் செயல் |
| 18. Advertise | Adver - tise | அட்வடைஸ் | விளம்பரப்படுத்து |
| 19. Affectionate | Affec - tionate | அபக்ச்சினேட் | பிரியமுள்ள |
| 20. Agreeable | Agree - able | அக்கிறயபிள் | ஒத்திருத்தல் |
| 21. Agriculture | Ag - riculture | அக்றிக்கல்சர் | விவசாயம் |
| 22. Airconditioning | Aircondi - tioning | எயர்கொண்டிஷனிங் | காற்று வெப்பக்கட்டுப்படுத்தல் |
| 23. Airmail | Air - mail | எயர்மெயில் | விமானத்தபால் |
| 24. Allocate | All - ocate | அலக்கேட் | இடம் ஒதுக்கு |
| 25. Allowance | Allow - ance | அலவன்ஸ் | மேலதிக சம்பளம் |
| 26. Alter | Al - ter | ஒல்டர் | மாற்றக்கூடிய |
| 27. Always | Al - ways | ஒல்வேஸ் | எப்பொழுதும் |
| 28. Ambition | Ambi - tion | அம்பிஷன் | நோக்கம் |
| 29. Amendment | Amend - ment | அமென்மன்ட் | திருத்தம் |
| 30. Amnesty | Am - nesty | அம்நெஸ்டி | பொது மன்னிப்பு |
| 31. Amusement | Amuse - ment | அம்யூஸ்மென்ட் | பொழுது போக்கு |
| 32. Anchor | Anc - hor | அங்கர் | நங்கூரம் |
| 33. Ancient | An - cient | ஏன்சன்ட் | பண்டைய |
| 34. Anger | An - ger | அங்கர் | கோபம்/ஆத்திரம் |
| 35. Angry | An - gry | அங்கிரி | கோபம் |

இவற்றின் தொடர்ச்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலகுவழி ஆங்கிலம்-16 இல் வெளிவரும்......

**மேலதிக தொடர்புகளுக்கு :-**
**உதயன் கல்விச்சுடர்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி - 071-4273035, 021-2223837**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்பாடல் ஊடகக் கற்கை நெறியைப் பாடசாலை மட்டத்தில் அறிமுகம் செய்தல்

**கடந்த மார்ச் 11 ஆம் திகதி வெளியாகிய கட்டுரையின் தொடர்ச்சி இது.**

கலைத்திட்ட உள்ளடக்க விரிவாக்க நிலையைப் பொறுத்தமட்டில் முதன்மை நிலையாக தொடர்பாடல் சார்ந்த அறிக்கை முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. குறிப்பாக தொடர்பாடல் சார்ந்த வகைப்படுத்தலும் அகமுகி, தனியாள் தொடர்பாடல், ஆளிடைத் தொடர்புத் தொடர்பாடல், குழு அல்லது மக்கள் நிலை சார்ந்த தொடர்பாடல் நிலைகள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றன. மேலும் தொடர்பாடல் வடிவ நிலைகளாக வாய்மொழி, வாய்மொழி சாரா எழுத்துமூலம், கட்புல, செவிப்புல, தொடர்பாடல், முறை மற்றும் முறைசாரா தொடர்பாடல் முறைமைகளும் கூறப்படுகின்றன.

ஊடக தொழில்நுட்ப பயன்பாட்டுத்திறன் என்ற எண்ணக்கருவில் 'கணனி சார், அலுவலக ஊடக உபகரணம், தகவல் பரிமாற்ற ஊடக கருவிகள், வகுப்பறை நிலை சார்ந்த உபகரணப் பயன்பாடுகள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றன. ஊடக நிறுவனம் பற்றிய கற்கையில் இலங்கையின் ஊடக நிறுவன அமைப்புக்களின் ஆரம்பமும் வளர்ச்சியும், ஊடக நிறுவனம் உள்ளக செயற்பாடுகள், ஊடக நிறுவன நோக்குகள், கொள்கைகள் பற்றி முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன.

ஊடக முகவர் நிறுவனங்கள் பற்றிய அறிக்கையில் சமூகப் பிரதிநிதித்துவம், பொருளாதாரப் பிரதிநிதித்துவம், சமய சமூக பிரதிநிதித்துவம், அழகியல் பற்றிய அறிக்கை பேசப்படுகின்றது. மேலும் நிழற்பட நுட்பமும் அதன் பயன்பாடு, அவை சார்ந்த திறன், முக்கியப்படுத்தப்படுகின்றன. தொடர்பாடலில் நிழற்பட பயன் நிலை, நிழற் படப்பிடிப்புசார் தொழில் நுட்பம், நிழற்படமும் ஆக்க நிலைத்தொழில் நுட்பமும் எய்தப்படல் அவசியம்.

ஊடகக் கற்கை சார்ந்த கலைத்திட்ட உள்ளடக்கத்தின் அடிப்படையில் செய்தி தயாரிப்பு அடிப்படைகள் பற்றித் தகவல் மூலங்கள், செய்தித் தயாரிப்பு அடிப்படைகள், செய்தி எழுதுதல், பதிப்பு பற்றி குறிப்பிடப்படுகின்றன. அதனுடன் இணைந்த வகையில் அச்சு ஊடக அடிப்படைகள் அலகு ஊடாக அச்சு ஊடக வரலாற்றுப் பார்வை, அதன் தன்மைகள், அச்சு ஊடகச் செயலொழுங்கு, தொழில்முறை பற்றி ஆராயப்படுகின்றன. இவை சார்ந்த அறிகைத் திறன் வலியுறுத்தப்படுகின்றன.

அடுத்து வானொலி ஊடக அடிப்படைகள் என்ற கட்டமைப்பினூடாக அதன் வரலாறு இயல்புகள், செயலொழுங்கு அவ்வூடகம் சார்ந்த தொழில் வாண்மை பற்றி அறிதல் கூறப்பட்டுள்ளது. ஊடக சினிமாக்கலை, வரலாறு, தொலைக்காட்சி வரலாறு, இயல்பு செயற்பாடு, தொழில்வாய்ப்பு நிலைகள் பற்றி கூறப்படுகின்றன.

ஊடகத்துறை சார்ந்த வெளியீட்டு சுதந்திரம் மற்றும் வெளியீட்டு உரிமை பற்றிய அலகில் வெளியீட்டு சுதந்திரம் தொடர்பான சட்டங்கள், ஒழுக்கக்கோவைகள், உரிமை சார்ந்த கருத்து நிலைகள் வலியுறுத்தப்படுகின்றன. விழிப்புணர்வுள்ள வாசகர்களை உருவாக்குதல் என்ற நிலையில் தொடர்பு ஊடகங்களும், உள்வாங்குவோனும், சிறுவர் மனமும், ஊடக அறிவும், செய்தி பெறுவோனின் வழிப்புணர்வு, அவனின் துலங்கல் பற்றி பாடப்புலங்களும், இக்கற்கையில் முக்கியப்படுத்தப்பட்டுள்ளதை விரிவுநிலை அடிப்படையில் அவதானிக்கமுடிகிறது.

### பாடசாலைமட்ட விசேட செயற்றிட்டங்கள்

தொடர்பாடல் ஊடகவியற்கற்கைப் பாடத்தை பாடசாலைமட்டத்தில் அமுலாக்கம் செய்கின்ற பொழுது அவை சார்ந்த பல விசேட செயற்பாடுகள் இக்கற்கைப் புலத்தை விழிப்படையச் செய்யும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பாடசா லைகளிலே தொடர்பாடல் கழகம் அமைத்தல் முக்கியமாக வலியுறுத்தப்படுகின்றது. இதனூடாக வருடாந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

**இதன்மூலம் ஊடக சுதந்திரம், வெளியீட்டு உரிமை தொடர்பான விழிப்புணர்வு மாணவர்கள் மத்தியில் ஏற்படும்**

பாடசாலைகளில் அறிமுகம் செய்யப்படும் தொடர்பாடல் ஊடகவியற் கற்கைநெறி ஊடாக பாடசாலை மட்டத்தில் தொடர்பாடல் கழகம் அமைத்தல் என்ற சிறப்புச் செயற்றிட்டம் முக்கியப்படுத்தப்படுகிறது. கழகம் ஊடாக வருடாந்த வேலைத்திட்டங்கள் அதிபர், ஆசிரியர், மாணவர்களால் நிறைவேற்றப்படுதல் எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலை மட்டத்தில் சுவர்ப்பத்திரிகை மற்றும் பருவகாலப் பத்திரிகை வெளியீடு, சஞ்சிகை பிரசுரிப்பு, தொடர்பாடல் தினத்தை வருட ரீதியில் இடம்பெறச் செய்தல்.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன உதவியுடன் ஆய்வு முயற்சிகளில் ஈடுபடுதல், தொடர்பாடல் ஊடக கணிப்பீட்டை விருத்தி அடையச் செய்து விரிவாக்குதல், இக்கற்கை தொடர்பான கருத்தரங்குகளை நடத்தல். பாடசாலை மட்ட வாசகர் கருத்துக்கணிப்பு நடத்துதல், பாடசாலை ஒலிபரப்பு வசதியைக் கொண்டு பரீட்சார்த்த வானொலிச் சேவையை திட்டமிட்டு நடத்துதல், சித்திரக் கதையாக்கம், கார்ட்டூன் ஆக்கம், நிழற்படம் எடுத்தல் செயற்பாட்டை முன்னெடுத்தல் முக்கியப்படுத்தப்படுகின்றன.

பாடசாலை மட்டத்தில் ஊடக தின விழாவை நடத்துதல், குறுங்கால வீடியோப்படம் தயாரித்தல், புகைப்படக் கண்காட்சி நடத்துதல் பற்றியும் தொடர்பாடல் கழக செயற்பாடுகளின் உப கூறுகளாக பாடத்திட்டத்தில் வலியுறுத்தப்படுகின்றன.

### கணிப்பீட்டு முறை

இப்பாடத்தைக் கணிப்பீடு செய்யும்முறை ஏனைய பாடங்களைப்போலவே இடம்பெறுகின்றது. பாடசாலை மட்டத்தில் மதிப்பீட்டுமுறை உபயோகித்து பாட அடைவை கணிப்பிடுதல், வருட இறுதியில் பாடசாலை மட்டத்தில் எழுத்து பரீட்சை மூலம் அறிவு, கிரகித்தல், உயர்கற்றல் மட்டம் அளவிடப்படும். தேசிய மட்டத்தில் ஜி.சீ.ஈ [சா/த] பரீட்சையில் கணிப்பிடப்படும் இப்பரீட்சைப் பத்திரம் பகுதி I ஒரு மணித்தியாலம் கொண்டதாக 40 வினாக்கள் சுருக்க விடைக்காக அமையும். தெரிவு செய்தல், இணைத்தல், நிரப்புதல் போன்ற நுட்பமுறைகள் பயன்படுத்தும் வகையில் வினாப்பத்திரம் அமையும் பகுதி II இரண்டு மணித்தியாலம் கொண்டதாக கட்டமைப்பு வினாக்கள், பகுதிக் கட்டமைப் புக்கள் என எட்டு வினாக்கள் வழங் கப்பட்டு ஆறு வினாக்கள் விடை எழுத பணிக்கப் படும். இவற்றுடன் செய்முறைப் பரீட்சை பாடசாலை மட்ட கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறும்.

### கற்றல், கற்பித்தல் நேர ஒதுக்கீடும் பாட உள்ளடக்கமும்

பாடத்தின் நேர ஒதுக்கீட்டு அடிப்படையிலான பாடவேளைகள் பற்றியும், பிரதான பாட உள்ளடக்க தன்மைகள் பற்றியும் பார்க்கின்ற போது தரம் 10இல் 60 பாடவேளைகளும், தரம் II இல் 60 பாடவேளைகளும் உள்ளடக்கப்படுகின்றன. தொடர்பாடல் பாகுபாடு, தொடர்பாடலின் இயல்பு, செயல்சார் ஊடகத்தொழில், நுட்பத் திறன், ஊடக நிறுவனங்கள் பற்றிய கற்கை, ஊடக பிரதிநிதித்துவகற்கை, நிழற்பட நுட்பமுறையும் பயன்பாட்டு திறனும், செய்தி தயாரிப்பு அடிப் படைகள், வானொலி ஊடக அமைப்புகள், அச்சு ஊடக அமைப்புகள், சினிமா தொலைக்காட்சி அடிப்படை, கருத்து வெளியீட்டு சுதந்திரம், வெளியீட்டு உரிமை, செய்தி வாசகர் என முக்கிய விடயக் கூறுகள் இடம்பெறுகின்றன.

### பாட அமுலாக்கமும் நடைமுறையும்

தொடர்பாடல் மற்றும் ஊடகக்கல்வி என்பது எமது நாட்டைப் பொறுத்தமட்டில் அறிமுகமாகின்ற புதியபாடப் புலம் ஆகும். இதனால் இத்துறைசார் கற்கை பற்றிய கல்வியியலாளர்கள் மற்றும் துறைசார் கல்வித் தகைமை உடைய வள ஆளணி என்பது வறுமையாகவே உள்ளது. பாடசாலை மட்டத்தில் பாடத்திட்டத்தை அமுலாக்கம் செய்யவும், மாணவர்களை செயற்பட வைக்கவும் பாடத்துறைசார் ஆசிரிய ஆளணி என்பது பூச்சிய நிலையிலேயே உள்ளது. பாடசாலை மட்டத்தில் மற்றும் மாணவர் மத்தியில் இப்பாடம்சார் உள்ளடக்கத்தில் தெளிவற்ற தன்மை மற்றும் விழிப்புணர்வு அற்ற தன்மை உள்ளமை நடைமுறையில் உயர் வினைத்திறனை உடனடியாக ஏற்படுத்த வாய்ப்புக் குறைவுக்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது.

பாடத்தை புதிதாக அறிமுகம் செய்வதில் கல்வி அமைச்சு அக்கறை கொள்வதுபோல அதனை கற்பிக்கக்கூடிய வகையிலான நிர்வாகக் கட்டமைப்பை அமைச்சில் இருந்து மாகாணம் ஊடாக வலய மட்டங்களுக்கு பரவலாக்கம் செய்து பாடம்சார் கைநூல், புத்தகங்களை உரிய வகையில் கிடைக்க வழி செய்யவேண்டும். பாடத்தை கற்பிக்கக்கூடிய வள ஆளணியினரை உருவாக்குவது உடனடித் தேவையாக உள்ளது. கல்வியியற் கல்லூரிகள் பல்கலைக்கழக மட்டங்களில் இப்பாடம் சார் கற்கைகளை பட்டப் படிப்பாகக் கொண்டுவரும் திட்டங்கள் காலதாமதம் இன்றி செயற்படுத்தப்பட வேண்டும்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் முதலில் தேசிய பாடசாலைகள் இக்கற்கையை அறிமுகம் செய்யத் திட்டமிடப்பட்டு அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றது. இதனைப் போல ஏனைய பாடசாலைகளிலும் தொடர்பாடல் மற்றும் ஊடக கற்கையில் அறிமுகத்தை மாணவர்கள் பயன்பெறும் வகையில் அறிமுகம் செய்து கிடைக்கிற ஆசிரிய வளத்தைக்கொண்டு கற்றல் கற்பித்தல் மேற்கொள்வது பயனுடையதாக அமையும்.

மாணவர்கள் மத்தியில் தொடர்பாடல் ஊடகக்கல்வி தொடர்பான பாட அறிமுகத்தை வேலை உலகுடன் தொடர்புபட்ட வகையில் ஆலோசனை வழங்கல் பயனுடையதாக அமையும். பாடசாலை மட்டத்தில் மாணவர்களிடையே இக்கற்கை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தல் அவசியமாகின்றது. ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் கல்விகற்ற ஆளணியினரை பயன்படுத்தி வலயமட்டத்தில் பாடசாலைகளில் ஆசிரியர்களை நியமித்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்க முடியும்.

ப.இராஜேஸ்வரன்.
ஆசிரியர், வண்ணை நாவலர் ம.வி.

# கல்வி - தொழிற்துறைகளின் மனித வள முகாமையில் உற்பத்தித் திறனை அதிகரித்தல்;

இன்று உலகளாவிய ரீதியில் கல்வி-தொழிற்றுறைகளில், மனித வள முகாமைத்துவத்தினூடாகத் தரமான பொருள்கள், சேவைகளை உற்பத்தி செய்யப் பல தந்திரோபாயங்கள் (Strategy)பிரயோகிக்கப்படுகின்றன. ஏனையவர்களைக் கொண்டு பணிகளை நிறைவேற்றும் கலையான மனிதவள முகாமைத்துவத்தில் உற்பத்தித் திறனை அதிகரித்தல் மிக முக்கிய அம்சமாக வுள்ளது.

இன்று குடும்பங்கள், சமூக நிறுவனங்கள், பாடசாலைகள்,ஏனைய தனியார் அரச சார்பு நிறுவனங்கள் அனைத்துமே உற்பத்தித்திறனை அதிகரித்தல் தொடர்பான விடயங்களில் கூடுதல் கவனம் எடுக்க வேண்டியுள்ளது. சமூகத்தவர்களும், ஆசிரியர்களும், வைத்தியர்களும், முகாமையாளர்களும், அதிபர்களும், தலைவர்களும் இது தொடர்பான விழிப்புணர்வு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவேண்டியுள்ளன.



உற்பத்தித்திறன் என்பது நிறுவன உள்ளீட்டு வளங்கள் (மனித பௌதீக, தொழில் நுட்ப) வெளியீட்டு பொருள்கள் சேவைகளின் பெறுமதியாக வுள்ளது. உற்பத்தித் திறனை அதிகரித்தல் என்பது ஊழியர்களின் மனோநிலை மாற்றச் செயற்பாடாவும், தர மேம்பாட்டினை உருவாக்கும் செய்முறையாகவுமுள்ளது.

தற்போதைய சமகாலச் சூழ்நிலைகள், சிக்கல்கள், சவால்கள், நிச்சயமற்ற தன்மைகள் ஆகியவற்றைச் சமாளிக்க வேண்டிய நிறுவனத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், முகாமையாளர்கள் தமது நிறுவனங்களின் உற்பத்தித் திறன்களை அதிகரிக்க வெளிப்புற சுற்றாடல் பற்றிய கூருணர் வைக் கொண்டிருக்க வேண்டும்.

*வாடிக்கையாளர்கள், நுகர்வோர்களுடன் நெருங்கியிருத்தல், அவர்களுடைய விருப்ப முன்னுரிமைகளை அறிந்து செயற்படல்.

*ஊழியரூடாக உற்பத்தித்திறனை மேம்படுத்தல்; நிறுவனத்தின் வெற்றியின் வெகுமதிகளை ஊழியரிடையே பகிர்ந்தளித்து அவர்களது முயற்சியின் அவசியத் தன்மையை உணர்த்தல்.

*முன்னுரிமை அளித்தல்-மிக அவசியமாகச் செய்ய வேண்டியவற்றுக்கு முதலில் முன்னுரிமை அளித்தல்.

*தன்னாட்சி முயற்சியுடைமை:- தனித் தனியாகவும், போட்டியுடனும் செயற்படும் வகையில் நிறுவனங்களைச் சிறு சிறு பிரிவுகளாகப் பிரித்து செயற்பட ஊக்கு வித்தல்.

*சிக்கல்-சவால்களை எதிர்கொள்ளும் தன்மை; தொடர்ந்து நிறுவனம் நிலைத்திருப்பதற்கு சமகாலச் சவால்களையும், சிக்கல்களையும் எதிர்கொள்ளும் ஆற்றலுள்ள பெறுமதியான ஊழியர்களைத் தெரிவு செய்து வைத்திருத்தல்.

*சாமர்த்தியமானதும், இளகியதும், இறுக்கமானதுமான செயலாற்றுகை; அர்ப்பணிப்பும், தியாகமும் கொண்டு விரைவான, சரியான தீர்மானங்களை எடுத்தல்.

இவ்வாறாக எல்லா நிறுவனங்களின் நோக்கமும் வெற்றி இலக்கை அடைவதாகவுள்ளது. இதற்கு போட்டியிட வேண்டியும், ஆபத்தான நிச்சயமற்ற தன்மைகளை எதிர்நோக்கவும் வேண்டியுள்ளது. இந்நிலையில் ஏதோ ஒன்றுக்கு மட்டுமன்றி எதற்குமே தயாராக இருக்க வேண்டிய நிர்பந்தமான சூழலில் செயற்பட வேண்டியுள்ளது. இந்நிலையில் தான் நிறுவனங்களும், பாடசாலைகளும் வெற்றியோடு முன்செல்ல, இன்னும் சில எவ்வாறு வெற்றி அடைவது என்று வழிதேட, இன்னும் சில தோல்வியடைந்த நிலையில் செயற்படுகின்றன.

ஒருவர் எதனைச் செய்ய வேண்டும் என்பது, அவர் எதை அடைய விரும்புகின்றார் என்பதைப் பொறுத்ததாகவுள்ளது. இவ்வகையில் எல்லா நிறுவனங்களையும் சரியான வினைத்திறன்- விளை திறனுடன் செயற்பட வைக்க உற்பத்திதிறன் பற்றிய விழிப்புணர்வு அனைவருக்கும் தேவையாகவுள்ளது.

### உற்பத்தித் திறனின் சிறப்பியல்புகள்

*நிறுவன ஊழியர்களின் வேலைகளுக்குப் பெறுமதியைச் சேர்ப்பது.

*நேர முகாமைத்துவ நிறுவனத்தில் குழு ஒற்றுமையை உருவாக்கி மனித வளங்களை ஒழுங்குபடுத்தல், விரயங்களைக் குறைத்தல்.

*தர-பண்பு ரீதியான அபிவிருத்தியை தரத்தை எடுத்துக் காட்டுவது.

*நுகர்வோரின் விருப்பத்தை நோக்காகக் கொண்டதுடன் சிறந்த வாழ்க்கைத் தரத்திற்கான ஆதாரங்களை வழங்குதல். பாதுகாப்புச் சூழல்.

*நிறுவனத்தில் வெற்றிக்கு வழிகாட்டுவதும் பொருள்கள் சேவைகளை உரிய முறையில் கையாள்தல்.

இந்த உற்பத்தித்திறன் செய்முறையானது அதிக வேலைவாங்கும் நடைமுறையல்ல. அத்துடன் அதிக வேலை செய்யும் நடைமுறையுமல்ல. இது உறுதியான வேலையைத் தரமாகக் குறித்த நேரத்தில் செய் வதை உறுதிப்படுத்துவதாகவுள்ளது. மேலும் விரயங்களைத் தடுப்பதற்காகவும் உள்ளது. இவ்விரயங்கள் பொருள்கள், சேவைகள், தரம், நேரம் என்பவையாகவுள்ளன. உற்பத்திற் திறனை அளவீடு செய்ய வினைத்திறன், விளைதிறன், சிக்கனம் ஆகிய மூன்றையும் கூட்ட வேண்டும்.

### ஊழியர்களுக்கான பயிற்சி

நிறுவன ஊழியர்கள் தமது தற்போதைய பணியைச் சிறப்பாக ஆற்றி உற்பத்தித் திறனை அதிகரிக்கப் பயிற்சி அவர்களுக்குத் துணை புரிவதுடன், அவர்களின் தொழில் வாழ்க்கைக் காலம் முழு வதும் பயிற்சியின் நன்மைகள் விரிவடைவதுடன் எதிர்காலப் பொறுப்புக்களுக்காக குறிப்பிட்ட ஊழியர்களைத் தயார்ப்படுத்தவும் துணை புரியும்.



சாதகமான நிலைமைகளின் கீழ் பயன்பாடு மற்றும் ஊக்கு வித்தல் ஆகிய முக்கிய இரட்டைத் தொழிற் பாட்டினை பயிற்சி கொண்டுள்ளது. நிறுவனம் வேண்டும் கருமத்தை ஆற்றுவதற்கான ஊழியரின் ஆற்றலை முன்னேற்றுவதனூடாக மனித வளத்தினைச் சிறப்பாகப் பயன்பாட்டிற்குட்படுத்த பயிற்சி வழிவகுக்கின்றது.

பயிற்சியானது உளவியல் ரீதியான தத்துவமாகவும், ஆலோசனை வழிகாட்டலின் [illegible] செயன்முறையாகவும், புதிய தொழில் நுட்பங்களின் பிரயோகமாகவும் காணப்படுகின்றது.

### உற்பத்தித் திறன் உத்திகள்

இன்று உற்பத்தித்தர உத்திகள் யப்பானிய முகாமைத்துவ அபிவிருத்தியின் வெற்றிகளாவன.

*யப்பானிய ஐந்து எஸ்விதி (Japan 5s)

*தரச் சுற்று அல்லது வட்டம் (Quality Circle)

*கைசின்(Kaizen)

*ஆலோசனைக் குழு முறைமை (Advisory Committee) யப்பானிய 5s முறையில் தேவையற்றதை அப்புறப்படுத்தல், ஒழுங்காக வைத்தல், சுத்தமான கலாசாரம் பேணல், உரிய தரத்துடன் பேணல், சுய ஒழுக்கத்தைப் பேணல் ஆகிய ஐந்து அம்சங்களைக் கொண்டது. வேலைத் தளம், பாடசாலை, வீடு ஆகியவற்றை ஒழுங்குபடுத்தி வினைத்திறனை அதிகரிக்க வழிகாட்டுகிறது. தரவட்டம் ஊழியர் தமது பிரச்சினைகளை ஆய்வுக்குட்படுத்தி தாமே தீர்க்க உதவுகின்றது. கைசின் படிப்படியான-தொடர்ச்சியான விருத்தியை எடுத்தியம்புகின்றது. இது விரயத்தைக் குறைக்கவும் உதவுகிறது. ஆலோசனைக் குழுக்கள் ஊழியர்களிடையே தெரிவு செய்யப்பட்டு அவற்றின் ஆலோசனைக ளுடன் முகாமைத்துவம் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது பெரும் பயனும் கிடைக்கின்றது.

நிறுவங்களின் தலைவர்களும், முகாமையாளர்களும் எதிர்காலவியல் தொடர்பான தீர்க்க தரிசனங்களினூடாக செயலாற்ற நவீன முகாமைத்துவ எண்ணக் கருக்கள் உதவுகின்றன. இவற்றை அறிந்து பிரயோகிப்பது இன்றைய காலத்தின் கடமையாகவுள்ளது. இவற்றினூடாக நவீன பங்குபற்றலினூடாக முகாமைச் செயன்முறை விருத்தியாகின்றது. ஊழியர் மனவலிமை ஊடான உற்பத்தித்திறன் விருத்தியை பங்குபற்றுதல் முகாமையே தோற்றுவிக்கும். இதற்கு ஊழியர் சபைகள்Workers Councils தன்னிச்சையான வேலைக் குழுக்கள் Aitonomus Work groups இலாபப்பகிர்வுத் திட்டங்கள் என்பவற்றின் செயற் பாடுகள் மேலும் வலுச் சேர்க்கின்றன.

பா.தனபாலன்
உபபீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் சமுதாயம் அகிம்சைவழியில் கௌரவமாக வாழ உழைக்க வேண்டும்

## கூட்டணித்தலைவர் ஆனந்தசங்கரி கூறுகிறார்

நல்லூர், ஏப்.24

இளம் சமுதாயம் துணிச்சலுடன் அகிம்சை வழியைக் கடைப்பிடித்து தமிழினத்தின் தலைமையில் ஏற்பட்டுள்ள இடைவெளியை நிரப்பி கௌரவமாகவும் சமமாகவும் ஏனைய மக்களுடன் வாழ ஒத்துழைக்க வேண்டும்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி பத்திரிகையாளர் சந்திப்பின் போது மேலும் கூறியதாவது:

ஜி.ஜி.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்ற தலைவர்களுக்குப் பின் இன்று உறுதியான தலைமைத்துவம் இல்லை. அத்தகைய நிலையில் இளைஞர்கள் துப்பாக்கிக்கும் அச்சுறுத்தல்களுக்கும் அஞ்சி ஒதுங்கிக்கொள்ளாது நடக்கவுள்ள சகல தேர்தல்களிலும் பங்குகொண்டு மக்கள் மத்தியில் உள்ள அச்சத்தையும் துயரங்களையும் போக்கக் கூடிய தான தலைவர்களாக உருவாக வேண்டும்.

யார் குற்றவாளி யார் சுற்றவாளி என்று ஆராய்வது இப்போது அவசியமல்ல. இப்போதைய தேவை எமது மக்கள் அனைத்தையும் இழந்து இருக்கும்போது எண்ணைச் சட்டியில் இருந்து தீக்குள் பாய்ந்து சாம்பராகும் நிலையைத் தடுக்கக் கூடியதாக இளைஞர்கள் செயற்பட முன்வரவேண்டியதே.

இன்றைய நிலைமைகளால் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் உயிருடன் வாழ வேண்டும். எமக்கு வேறு எதுவும் வேண்டாம் என்ற நிலையில் இருக்கிறார்கள். இளைஞர் சமுதாயம் அகிம்சை முறையிலான நல்ல தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்புவர்களாக உருவாக வேண்டியது முக்கியமாகும் - என்று அவர் தெரிவித்தார். (ப-111)

## ஜீவநதி மலர் வெளியீடு நாளை

கோப்பாய், ஏப்.24

ஜீவநதி 2ஆம் ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியில் கலாபூசணம் தெணியான் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ்.கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், தேவரையாளி இந்துக்கல்லூரி அதிபர் மா.நவநீதமணி, கொற்றை பி.கிருஷ்ணானந்தன் ஆகியோரும் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இராஜேஸ்கண்ணனும், மதிப்பீட்டுரைகளை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஈ.குமரன், த.அஜந்தகுமார், யாழ்.கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம் ஆகியோரும் நிகழ்த்துவர்.

நூலின் முதல் பிரதியை லயன் டாக்டர் வை.தியாகராஜா பெற்றுக்கொள்வார். ஏற்புரையை ஜீவநதி இதழின் பிரதம ஆசிரியர் க.பரணிதரன் நிகழ்த்துவார். (50-72)



மட்டுவில் வடக்கு லூர்த்து மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா அண்மையில் நடைபெற்றது. திருநாள் தினத்தன்று மாதாவின் திருச்சொரூப பவனி இடம்பெறுவதை படத்தில் காணலாம். (படங்கள்:அருணன்)

# இலங்கை குறித்து பாதுகாப்புச் சபை உடனடியாக விவாதிக்க வேண்டும்!

## மன்னிப்புச் சபை அவசர வேண்டுகோள்

கொழும்பு, ஏப். 24

இலங்கை நெருக்கடியை எவ்வித தாமதமுமின்றி உடனடியாக விவாதிக் குமாறு ஐ.நா. பாதுகாப்புச் சபையை சர்வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது.

இலங்கையில் வன்முறைகள் தீவிரமடைவது, மனிதாபிமான மனித உரிமை நிலை மோசமடைவது, குறிப்பாகக் கடந்த சில நாட்களில் பொதுமக்களின் உயிரிழப்புகள் ஏற்பட்டமை குறித்து பாதுகாப்புச் சபை கவனம் செலுத்தவேண்டும் என்றும் மன்னிப்புச்சபை கோரியுள்ளது.

இலங்கையில் நிலை முற்றுமுழுதாக அவநம்பிக்கையளிப்பதாக உள்ளது எனக் குறிப்பிட்டுள்ள மன்னிப்புச்சபை, பாதுகாப்புச்சபை மனிதாபிமான யுத்தநிறுத்தத்திற்கு வேண்டுகோள் விடுக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

திங்கட்கிழமை இடம்பெற்ற மோதலில் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப் பட்டனர் எனத் தகவல் வெளியாவதாகத் தெரிவித்துள்ள மன்னிப்புச்சபை, பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்படு வதைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்டவர்கள் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதலில் சிக்குண்டுள்ள மக்களின் பாது காப்பே முக்கியமானது என மன்னிப்புச் சபையைச் சேர்ந்த யொலன்டா பொஸ் டெர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மக்களின் நிலை காரணமாக இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் படுகொலைகளைத் தடுப்பதற்கு முயல வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (சி)

# தேர்தல் வன்முறைகளைக் குறைக்க 17 ஆவது திருத்தச் சட்டம் அவசியம்

கொழும்பு, ஏப், 24

17 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் தேர்தல்களின்போது வன்முறைகள் இடம்பெறுவது குறைவடையும் எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப் பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

இதனால், தேர்தல்களின்போது பாரியளவிலான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்துவதற்கு 17 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம் எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் மாகாண ஒருங்கிணைப்பாளர் அஜ்மீர் தெரிவித்தார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள மேல் மாகாணசபைத் தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் சடுதியாக அதிகரித்து வருகின்றன என அவர் மேலும் கூறினார்.

இவ்வாறு இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களைப் பொலிஸார் கண்டு கொள்வதில்லை எனத் தெரிவித்த தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்ப தற்கான நிலையத்தின் மாகாண ஒருங்கிணைப்பாளர் அஜ்மீர், ஜே.வி.பி. ஆதரவாளர் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக வியாங்கொட பொலிஸார் இதுவரை நடவடிக்கை எதையும் எடுக்கவில்லையெனவும் குறிப்பிட்டார்.

அத்துடன், 17 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் இவ்வாறான வன்முறைகளைக் குறைத்துக்கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார். (க-10)

# மேலக தேர்தல் பிரசாரம் புதன் நள்ளிரவு நிறைவு

கொழும்பு, ஏப், 24

மேல் மாகாணசபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ளன.

இதனால், நேற்றுமுன்தினம் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் தமது இறுதிப் பிரசார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டன.

இதன்படி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனது இறுதிப் பிரசார நடவடிக்கைகளை மாவட்டங்கள் ரீதியாகவும், ஐக்கிய தேசியக் கட்சி தனது இறுதிப் பிரசார நடவடிக்கைகளை கிரான்பாஸ் - பலாமரச் சந்தியிலும் மேற்கொண்டுள்ளன.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நள்ளிரவுக்குப் பின்னர் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடும் கட்சிகளின் செயற்பாடுகளை தேர்தல் வன்முறைகளாகக் கருதி சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள மேல் மாகாணசபைத் தேர்தலில் 38 லட்சத்து 20 ஆயிரத்து 214 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் கொழும்பு மாவட்டத்தில் 15 லட்சத்து 60 ஆயிரத்து 593 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 14 லட்சத்து 58 ஆயிரத்து 295 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 8 லட்சத்து ஆயிரத்து 326 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள் ளனர் எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (சி)

# கருணாவின் அலுவலகத்தின் மீது புதனன்று கைக்குண்டுத் தாக்குதல்

## ஒருவர் பலி; மற்றொருவர் காயம்

கொழும்பு, ஏப், 24

அம்பாறை, கல்முனை, சேனைக்குடியிருப்புக் கிராமத்திலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சி அலுவலகத்தின் மீது இனந்தெரியாத நபர்கள் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் தாக்குதல் நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தாக்குதலில் விஜி (வயது 20) என்பவர் கொல்லப்பட்டார். கிரி என்ற இளைஞர் காயமடைந்த நிலையில் கல்முனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சேனைக்குடியிருப்புக் கிராமத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) அலுவலகத்தின் மீதே கைக்குண்டுத் தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-10-220)

# முறைசாராக் கல்விப் பிரிவின் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சுழிபுரம் பெரியபுலோ அண்ணா சனசமூக நிலையத்தில் நாளை 25ஆம் திகதி சனிக்கிழமை கல்வி விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விச் செயற்றிட்ட அலுவலரினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில் சங்கானைப் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு, பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலய அதிபர் சி.சிவகணேச சுந்தரன், செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா, கிராம அலுவலர் சிறிறஞ்சன் ஆகியோர் கலந்து கருத்துரை வழங்கவுள்ளனர்.

பாடசாலை செல்லாத பிள்ளைகளையும் இடைவிலகிய மாணவர்களையும் இனங்கண்டு கல்வி வழங்குவதற்கும், பாடசாலை வரவு ஒழுங்கீனமான மாணவர்களின் வரவை சீராக்கம் செய்வதற்கும், கட்டாயக் கல்வி, வளர்ந்தோர் கல்வி என்பவற்றை முன்னெடுப்பதற்கும் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இதில் பெற்றோர் மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி செயற்றிட்ட அலுவலர் வேண்டியுள்ளார். (04-224)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு வசதிகள்

யாழ்ப்பாணம், ஏப்.24

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் உணவு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சியில் உள்ள கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகிய நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினர் உணவு வசதிகளை வழங்கி வருகின்றனர். (50-9)

## உளசமூக நிகழ்ச்சி நிறைவு விழா

கோப்பாய், ஏப்.24

சாந்திகம் அமைப்பின் சமுதாய மட்டத்திலான உளசமூக நிகழ்ச்சி நிறைவு விழா இன்று வெள்ளிக்கிழமை நவக்கிரி பொதுநோக்கு மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் உளநலம் சார்ந்த சிறப்புரைகள் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. இந்நிகழ்விற்கு ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி விழா ஏற்பாட்டாளர்கள் வேண்டியுள்ளனர். (204-72)

## வெல்லாவெளியில் மக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஏப், 24

மட்டக்களப்பு - வெல்லாவெளிப் பிரதேசத்திலுள்ள மக்கள் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர்.

வெல்லாவெளிப் பிரதேசத்தில் தொடர்ந்தும் அதிகரித்து வரும் காட்டு யானைகளின் தொல்லையைக் கண்டித்தே மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை மட்டக்களப்பு - வெல்லாவெளிப் பிரதேச செயலகத்திற்கு முன்னால் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் காரணமாக குறித்த பிரதேசத்திலுள்ள வீதிகளில் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் மலசலகூடங்களை அமைப்பதற்கு நடவடிக்கை

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தோர் தங்கவைக்கப்பட்டுள்ள, தென்மராட்சி நலன்புரி நிலையங்களில் போதிய மல்சல கூட வசதிகள் இல்லாமையால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்துத் தற்காலிக மலசலகூடங்களை அமைக்கும் பணிகளைத் தொண்டு நிறுவனங்கள் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நலன்புரி நிலையங்களில் பெரும்எண்ணிக்கையில் மக்கள் தங்கியுள்ள போதும் அவர்களுக்குரிய மலசலகூட வசதிகள் போதியளவு இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றதாகவும், இதனால் அங்கு சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நலன்புரி நிலையங்களில் தற்காலிக மலசலகூடங்களை அமைப்பதற்குத் தொண்டு நிறுவனங்கள் தற்போது துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தொண்டு நிறுவனங்களின் வட்டாரங்கள் தெரிவித்தன.

## வடமராட்சி வலய உடற்கல்விப் போட்டி

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்கல்விப் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா தலைமை தாங்குவார். (50-236)


வசீகரத் தோற்றத்திற்கு
சந்தனாலேப ஸ்கிறீம் கிறீம்



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்)
MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO: A/L250.


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 ★ 03 ★ 1946



மறைவு 15 ★ 04 ★ 1999

**அமரர் கந்தையா கணேஸ் (வேலணை)**

திதி: அமாவாசை

**ஆண்டுகள் பத்து கடந்தபோதும் உங்களின் நினைவுகள் என்றும் மாறாது**

முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை.

உங்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர். (84670)





ராஜாதி ராஜ
ராஜகம்பீர ராஜமார்த்தாண்ட
லக்கிலாண்ட் பிஸ்கட் மன்னன்
குடும்பத்துடன்
யாழ்.நகர் வாரார்! வாரார்!! வாரார்!!!

நீண்டகால இடைவெளியின் பின் மீண்டும் யாழ்.நகரில் அழகிய வர்ணப் பைக்கட்டுக்களில் தரத்தில் அதிஉயர்ந்த, விலையில் மிகக்குறைந்த, இலங்கையில் முதல்தர பிஸ்கட்டாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தரம் கொண்ட, லக்கிலாண்ட் பிஸ்கட் தற்போது யாழ்.நகரில் நீங்கள் வாங்கிடலாம். விருந்தினர் வீட்டுக்கு வெறும் கையுடன் செல்லுவதா? விருப்பமுடன் எடுத்துச் செல்லுங்கள். விலையில் மலிந்து, தரத்தில் சிறந்து, சுவையில் சுந்தரமாய் திகழும் லக்கி லாண்ட் கிவ்ட் பிஸ்கட் வகைகள்.

லக்கிலாண்ட் உற்பத்திகளோ பல நீங்கள் அறிந்திட அவற்றிற் சில

லக்கிலாண்ட் கிப்ட் வகைகள்
லக்கிலாண்ட் லெமன் பஃவ்
லக்கிலாண்ட் லெமன் கிறீம்
லக்கிலாண்ட் போர் பொன் சொக்லட் கிறீம்
லக்கிலாண்ட் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் பட்டர் கெரோல்
லக்கிலாண்ட் கஸ்ரட் கிறீம்
லக்கிலாண்ட் மாரி, ஜின்ஜர், நைஸ்
லக்கிலாண்ட் சோட்கேஸ்
லக்கிலாண்ட் டு ஜெம் (Gem) என்னும் பல

Manufactured By:
Luckyland
Biscuit Manufactures
Kundasale, Kandy,
Srilanka.

ஏக விநியோகஸ்தர்கள் : சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி


## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.24

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான அவசரக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதால் சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மேற்படி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (201)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கோப்பாய், ஏப்.24

ஊரெழு மனித உரிமைகள் நிலையத்தின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை சனிக் கிழமை காலை 9 மணிக்கு அச்செழு தனிப்பனையடி பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் மேற்படி பிரதேச மக்களை கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(204-72)

## மோ.சைக்கிளில் சென்றவர் பன்றியுடன் மோதி காயம்

யாழ்ப்பாணம், ஏப்.24

வீதியின் குறுக்கே ஓடிய பன்றியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த 20ஆம் திகதி மாலை சாவகச்சேரி கெருடாவிலில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தே.பாலகிருஷ்ணன் (வயது 30) என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

(50-207)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஏப்.24

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் சுயதொழில் செய்பவர்களுக்கான புதிய பயனாளிகளை இணைப்பதற்கான நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இந்தச் சேவை இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு சிறுப்பிட்டி மேற்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (204-72)

### காணி தேவை

யாழ்.மாநகசபை எல்லைக்குள் பிரதான வீதிகளில் 1-2 பரப்புக் காணி தேவை.
இடைத்தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0771744581 (84621)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ். கல்வி வலய பாடசாலைகளில் தரம் 10, 11 மாணவர்களுக்கான குடியுரிமைப் பாடத் திணைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ். கல்வி வலய ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (50-9)

## நன்றி கூறுகின்றோம்

எமது வேண்டுகோளுக்கிணங்க, முன்பள்ளிச் சிறார்களின் நன்மை கருதி, முன்பள்ளிக்கான பாதையைப் புனரமைத்து உதவிய திரு.சி.வே. குலநாயகம் (செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை) திரு.க. கனகதுரை (உள்ளூராட்சி உதவியாளர்) திரு.தெ. பாலதாஸ் ( தொழில்நுட்ப உத்தியோகத்தர்) மற்றும் ஒத்துழைத்த சகல அன்பு நெஞ்சங்களுக்கும் மனோகரா மக்கள் சார்பில் மனப்பூர்வ நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அல்வாய் மனோகரா சனசமூக நிலையம்,
அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம்,
அல்வாய் மனோகரா முன்பள்ளி.
(84672)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட செயலக புனர்வாழ்வு புனரமைப்பு செயலக கணக்காளரும் துறைமுகத்திலிருந்து பொருள்களை களஞ்சியத்திற்கு ஏற்றிப்பறித்தல் தொடர்பான மாவட்ட செயலக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரும் எமது பாரவூர்திச் சங்க செயற்பாடுகளுக்கு பல வழிகளில் ஒத்துழைப்பு தருபவருமான ச.குகதாஸ் அவர்களின் தந்தை

**அமரர் குமாரவேலு சண்முகநாதன்**

அவர்கள் 21.04.2009 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மா/த/பா/ஊ/கூ/சங்கம்,
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தலைவர், பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள், சாரதிகள், பணியாளர்கள். (சி/558175)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 ★ 06 ★ 1917



மறைவு 05 ★ 05 ★ 2008

**திருமதி செல்லையா சரஸ்வதி**

திதி:24.04.2009 (அமாவாசை)

**அன்பின் உறைவிடமாய் அறத்தின் வடிவமாய், மங்காப் புகழ்பெற்ற எம் தாயே! ஆறாத் துன்பத்தில் எமை ஆழ்த்தி விட்டு சென்றதேனோ!**

இல.11, 2ஆம் குறுக்கு,
கொழும்புத்துறை.

உமது பிரிவால் வாடும்:
ந.மங்கையர்க்கரசி (மகள்). (84669)

## மரண அறிவித்தல்

### பொன்னுச்சாமி பாக்கியம்



திருநெல்வேலி, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி பாக்கியம் 20.04.2009 திங்கட்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பொன்னுச்சாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சுப்பிரமணியம், இரத்தினம் மற்றும் இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேந்திரம், பரமேஸ்வரி (கனடா), கமலாதேவி (வவுனியா), பவளக்கொடி, பரலோகநாயகி, அமரர் பரலோகநாதன் மற்றும் நித்தியானந்தம் (செல்வம் - உரிமையாளர் உமா தொலைத் தொடர்பு நிலையம், திருநெல்வேலி), மதியாபரணம், பற்குணராசா (குணம்) ஆகியோரின் பாசமிகு தாயும் தவமலர், இரத்தினசிங்கம் (கனடா), அமரர் பாலசுந்தரம் மற்றும் செல்வராசா (பத்தமேனி), பாலசுப்பிரமணியம் (மெக்கானிக் வட்டுக்கோட்டை Balah), உமாதேவி, புஸ்பராணி, ரங்கநாயகி ஆகியோரின் பாசமிகு மாமியும் ரவி -கௌசல்யா (கனடா), ரமேஸ் -துசி (கனடா), ரமணி - கலைச்செல்வன் (கனடா), தாரணி, மதுரா, திருவருட்செல்வி - கருணாகரன் (லிபியா), கிருபைராசா - சயந்தா, செந்தூர்ச்செல்வி - யூட், தேனுகா - இராமமூர்த்தி, கௌசலா, ரிஸானுகன், மனோஜா, ஹரிஹரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நிதர்சனன் (கனடா), நிவேதன் (கனடா), வைஷ்ணவி (கனடா), பிரசாந் (கனடா), சரணியா (கனடா), கங்கனி (கனடா), குணப்பிரசாத், அபிக்கா, ரிதுஷனா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.04.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு.
077 9583001, 077 9507272, 222 3475

தகவல்:
குடும்பத்தினர். (84675)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்லி அணியுடன் போராடியது சென்னை; வில்லியர்ஸின் சதத்தால் அசத்தலான வெற்றி



டர்பன், ஏப்.24

ஐ.பி.எல். ருவன்ரி-20 போட்டித் தொடரில் நேற்று மாலை நடைபெற்ற போட்டியில் டெல்லி டேர் டெவில்ஸ் அணியிடம் போராடித் தோற்றது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் இரண்டாவது ஐ.பி.எல். போட்டியில் நேற்று ஷேவாக் தலைமையிலான டெல்லி டேர் டெவில்ஸ் அணியும் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லிடேர் டெவில்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய கம்பீர் (0) பாலாஜி வீசிய முதலாவது பந்திலேயே விக்கெட் காப்பாளர் தோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய ஏ.பி.டீ. வில்லியர்ஸ் அடித்தாடினார். இவ்வேளையில் அணித் தலைவர் ஷேவாக் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க டில்ஸான் வில்லியர்ஸிடன் ஜோடி சேர்ந்து அதிரடியாக ஆடினார்.

டில்ஸான் 27 பந்துகளில் 50 ஓட்டங்களை 4 பவுண்டறிகள் 2 சிக்ஸர்கள் அடங்கலாக பெற்று ஆட்டமிழக்க வில்லியர்ஸ் சதம் கடந்தார்.

இவர் 54 பந்துகளுக்கு முகங் கொடுத்து 5 பவுண்டரிகள் 6 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 105 ஓட்டங்களை விளாசினார். பின்னர் களமிறங்கிய கார்த்திக் (18), திவாரி (9) என ஆட்டமிழக்க டெல்லி டேர் டெவில்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது.

சென்னை சுப்பர் கிங்ஸ் சார்பில் பந்து வீசிய பாலாஜி 19 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கோனி, மோர்கல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

190 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பில் பார்த்தீவ் பட்டேல் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஆடிய ஹைடன் 27 பந்துகளை எதிர்கொண்டு 5 பவுண்டறிகள் 3 சிக்ஸர்கள் அடங்கலாக 57 ஓட்டங்களையும் ரெய்னா 41 ஓட்டங்களையும் பெற்றனர். பின்னர் களமிறங்கிய துடுப்பாட்ட வீரர்கள் எவரும் பிரகாசிக்காததால் சென்னை சுப்பர் கிங்ஸ் தோல்வியை நோக்கி சென்றது.

டோனி 5, பிளின்ரொப் 16, மோர்கல் 13, பத்ரிநாத் 7 என ஆட்டமிழந்தனர். சென்னை சுப்பர் கிங்ஸின் கோனி 6, ஜோகிந்தர் சர்மா 4, பாலாஜி 0 ஆகியோர் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தனர் இந்த நிலையில் 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 180 ஓட்டங்களைப்பெற்று 9 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

டெல்லி டேர் டெவில்ஸ் சார்பில் பந்து வீசிய சல்வான் 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் விற்றோரி 29 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் நெஹ்ரா 33 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

டெல்லி டேர்டெவில்ஸ் அணியின் வெற்றிக்கு சதம் அடித்து வழிவகுத்த வில்லியர்ஸுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. (1-6)

# பெங்களூர் ரோயல் அணி அரையிறுதிக்கு முன்னேறும்

## கலீஸ் நம்பிக்கை


ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி அரை இறுதிக்கு முன்னேறும் என்று அந்த அணியில் இடம்பெற்றுள்ள தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரர் கலீஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த ஆண்டு எங்கள் அணியை டெஸ்ட் அணி என்று முத்திரை குத்தினார்கள். அதில் எனக்கு வருத்தம் இல்லை. ஆனால், நாங்கள் விளையாடிய விதம்தான் மிகவும் ஏமாற்றம் அளித்தது. இம்முறை அப்படி மோசமாக விளையாடமாட்டோம். எல்லா வீரர்களுமே உற்சாகமாக உள்ளோம். அணித் தலைவர் பீற்றர்ஸன், பயிற்சியாளர் ரேஜென்னிங்ஸ்தான் இதற்கு காரணம்.

டெஸ்ட் போட்டியில் விளையாடும் வீரரால், எந்த வகையான போட்டியிலும் சிறப்பாக விளையாட முடியும். ருவென்ரி 20 போட்டியும் அதற்கு விதிவிலக்கல்ல. அனுபவ வீரர்கள் பலர் இதை ஏற்கனவே நிரூபித்துள்ளனர். அரை இறுதிக்கு பெங்களூர் அணி நிச்சயம் முன்னேறும் - இவ்வாறு கலீஸ் கூறினார்.

# முதல் ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலியாவை 4 விக்கெட்டுக்களால் வீழ்த்தியது பாகிஸ்தான்



6 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்திய அப்ரிடியை சக பாகிஸ்தான் வீரர்கள் பாராட்டுகின்றனர்.

டுபாயில் நடைபெற்றுவரும் அவுஸ்திரேலிய - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட் டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார். ஆரம்பத்தில் நிதானமாக விளையாடிய அவுஸ்திரேலிய அணியை சயிட் அப்ரடி அபாரமாகப் பந்து வீசி 122 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்கள் என்ற இக்கட்டான நிலைக்குக் கொண்டுவந்தார்.

அந்த இக்கட்டான நிலையிலும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜேம்ஸ் ஹோப்ஸ் 5 பவுண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 46 பந்துகளில் 48 ஓட்டங்களை எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஷொகைப் அக்தர் 6 ஓவர்கள் பந்துவீசி 35 ஓட்டங்களைக் கொடுத்து விக்கெட்டுகள் எதையும் வீழ்த்தவில்லை. இளம் சுழற்பந்து வீச்சாளர் ஸயீத் அஜ்மல் 10 ஓவர்களில் 19 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். உமர் குல் ஒரு விக்கெட்டையும் அப்ரடி ஏனைய விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

38.5 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி 168 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இரவு உணவு இடைவேளைக்குப் பின்னர் பாகிஸ்தான் அணி 169 என்ற எளிய இலக்கை நோக்கிக் களமிறங்கியது.

பாகிஸ்தான் அணி 44.1 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. பாகிஸ்தான் அணியின் சார்பில் ஆரம்ப ஆட்டக்காரராகக் களமிறங்கி கம்ரன் அக்மல் 48 ஓட்டங்களை எடுத்தார். ஆட்டநாயகனாக சயிட் அப்ரடி தெரிவுசெய்யப்பட்டார்.

# 'பத்மஸ்ரீ' விழாவில் டோனி, ஹர்பஜன் பங்கேற்காததால் தொடர்ந்து சர்ச்சை



புதுடில்லி, ஏப்.24

சமீபத்தில் நடந்த பத்மஸ்ரீ விருது விழாவிற்கு, விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டிருந்த இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் டோனி, சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் ஆகியோர் பங்கேற்காமல் போனது கடும் சர்ச்சையை கிளப்பயது.

உயர்ந்த விருதை அவமதித்துவிட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இருவருக்கும் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் எம்.எஸ். கில்லும் கண்டனம் தெரிவித்து இருந்தார். வருங்காலங்களில் விருது விழாவில் வீரர்கள் நேரில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் மத்திய விளையாட்டு அமைச்சக இணைச் செயலாளர் ஸ்ரீநிவாஸ், அனைத்து விளையாட்டு அமைப்புகள் மற்றும் இந்திய ஒலிம்பிக் சங்கம், உள்துறை அமைச்சகம் ஆகியவற்றுக்கு இது தொடர்பாக எழுதியுள்ள கடிதத்தில், ''ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும் விருது வழங்கும் விழாவில் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டவர்கள் நேரில் வந்தால் தான் விருது அளிக்கப்படும். விருதுக்கு தேர்வானவர்களுக்கு பதிலாக மாற்று நபர்கள் அந்த விருதுகளை வாங்கக் கூடாது.

விருது வழங்கும் விழாவில் கலந்து கொள்ள முடியாததற்கு சரியான காரணம் இருந்தால் அதனை முன்கூட்டியே விளையாட்டு அமைச்சகத்துக்கு தெரிவிக்க வேண்டும். அது ஏற்றுக்கொள்ளப்பட்டால் அந்த நபருக்கு பின்னர் ஒரு திகதியில் அந்த விருது விளையாட்டு அமைச்சரால் வழங்கப்படும். விருதுக்கு தேர்வானவர்கள் வராதபட்சத்தில் சரியான காரணம் அளிக்காவிட்டால், அவர்களது விருது திரும்பப் பெறப்படும். இது விளையாட்டு விருதுக்கு மட்டுமின்றி, பத்மஸ்ரீ விருதுக்கும் பொருந்தும் - என்று கூறப்பட்டுள்ளது.




# 2018இல் ஆசிய விளையாட்டு நடத்தும் வாய்ப்பு இந்தியாவுக்கு

புதுடில்லி, ஏப்.24

2018ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டு போட்டியை நடத்தும் வாய்ப்பு இந்தியாவுக்கு வழங்கப்படவேண்டும் என்று ஆசிய கவுன்ஸில் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

ஒலிம்பிக் கவுன்ஸிலின் ஆசிய தலைவர் ஷேக் அகமது இந்தியா சென்றுள்ளார். டில்லியில் இந்திய ஒலிம்பிக் சங்க பொதுச் செயலாளர் ரன்திர்சிங்கை சந்தித்துப் பேசினார். அப்போது 2018ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுக்களை இந்தியாவில் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி விவாதித்தனர். 2014ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டை நடத்தும் வாய்ப்பை இழந்த இந்தியா, 2018ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டு போட்டியை நடத்தும் வாய்ப்பில் முன்னணியில் இருக்கிறது.

இது குறித்து ஷேக் அகமது கூறியவை வருமாறு:-

ஆசிய விளையாட்டு அமைப்பை உருவாக்கியது இந்தியாதான். 1954ஆம் ஆண்டு முதலாவது ஆசிய விளையாட்டு மற்றும் 1982ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டை நடத்திய அனுபவம் இந்தியாவுக்கு உள்ளது. இதன் தொடர்ச்சியாக அடுத்த ஆண்டு 'கொமன்வெல்த்' போட்டியையும் நடத்தவுள்ளது. இந்தியா நிறைய வளர்ச்சி கண்டுள்ளது. எனவே ஆசிய விளையாட்டுப் போட்டியை புதிய தொழில்நுட்பத்துடன் இந்தியாவில் நடத்த அனுமதிக்கப்படவேண்டும்.

2010ஆம் ஆண்டு 'கொமன்வெல்த்' போட்டிக்காக உருவாக்கப்படும் 80 சதவீத கட்டுமான வசதிகளை ஆசிய விளையாட்டுக்கும் பயன்படுத்த வேண்டும். தகவல் தொடர்பு, போக்குவரத்து வசதிகளும் இதில் அடங்கும்.

இந்தியாவுடன் நாங்கள் நட்புறவுடன் இருக்கிறோம். உலகில் எந்த இடத்திற்கும் சென்று இந்தியா பாதுகாப்பான நாடு என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே சமயம் ஆசிய கவுன்ஸில் தலைவர் என்ற முறையில் போட்டி சிறப்பாகவும், பாதுகாப்பாகவும் நடத்தப்படவேண்டும் என்பது எனது பணியாகும். இந்த விடயத்தில் நாங்கள் இந்தியாவுடன் தோளோடு தோள்கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

- இவ்வாறு அவர் கூறினார்.

# டேவிஸ் கோப்பை ரென்னிஸ் சென்னையில்; எதிர்த்து அவுஸ்திரேலியா முறையீடு

அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான டேவிஸ் கோப்பை ரென்னிஸ் போட்டிகளை நடத்த சென்னையை சர்வதேச ரென்னிஸ் கூட்டமைப்பு அங்கீகரித்துள்ளதை எதிர்த்து அவுஸ்திரேலிய ரென்னிஸ் சங்கம் முறையீடு செய்துள்ளது.

பாதுகாப்புக் காரணம் கருதி இந்தியாவிலிருந்து போட்டிகளை அயல் நாட்டு மைதானங்களுக்கு மாற்றுமாறு அவுஸ்திரேலியா கோரிக்கை வைத்துள்ளது.

இந்தக் கோரிக்கையை சர்வதேச ரென்னிஸ் கூட்டமைப்பு இந்த வாரத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்கிறது.

ஆனால் இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அனைத்திந்திய ரென்னிஸ் கூட்டமைப்பு மே மாதம் 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை இந்த டேவிஸ் கோப்பை ரென்னிஸ் போட்டிகள் சென்னையிலேயே நடைபெறும் என்றும் அதற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைக்காகப் போராடும் ஈழத் தமிழருக்கு பக்கபலமாக இருப்போரே விடுதலைப் புலிகள்

## கம்யூ. பாண்டியன் தெரிவிப்பு



கோவை,ஏப். 24

இலங்கைத் தமிழர்கள் தங்களது உரிமைக்காகவும், சுதந்திரத்துக்காகவும் போராடுகிறார்கள். விடுதலைப் புலிகள் அவர்களுக்கு பக்கபலமாக இருக்கிறார்களே தவிர, மக்களை கேடயங்களாகப் பயன்படுத்தவில்லை. பிரபாகரனை இலங்கை அரசால் பிடிக்க முடியாது. அவர் சரண் அடையவும் மாட்டார்.

- இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தா.பாண்டியன் கூறியுள்ளார்.

கோவையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் இதனைக் கூறினார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினை, தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்றும், தேர்தலில் எந்தப் பாதிப்பும் வராது என்றும் அமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறியிருக்கும் நிலையில், தமிழக முதல்வர் கருணாநிதி இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து முழு வேலை நிறுத்தம் செய்கிறார்.

பொதுவேலை நிறுத்தத்தை நாங்கள் ஆதரிக்கவும் இல்லை. எதிர்க்கவும் இல்லை.

ஆனால் இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படும்வரை எங்களுடைய கோரிக்கையை தொடர்ந்து வற்புறுத்துவோம்.

இனப்படுகொலையை தடுத்து நிறுத்த வேண்டும் என்று இதுவரை இந்தியா சொல்லவும் இல்லை. நடவடிக்கை எடுக்கவும் இல்லை.

இப்போது இலங்கைத் தமிழர்கள் கொலை செய்யப்படுவது அதிகரித்துள்ளது. தேர்தலுக்காக தமிழக முதல்வர் அறிவித்துள்ள கடைசி முயற்சிதான் இந்த பொதுவேலை நிறுத்தம் என்று நான் கருதுகிறேன். ஆனால் இதுவும் பலனை தரப் போவதில்லை.

இலங்கையில் உண்மையில் நடைபெறுவது என்ன என்று உண்மையான தகவலைக் கூட சேகரிக்க முடியவில்லை. இதற்காக இந்தியாவும் நடவடிக்கை எடுக்கவில்லை.

இலங்கைத் தமிழர்கள் தங்களது உரிமைக்காகவும், சுதந்திரத்துக்காகவும் போராடுகிறார்கள். விடுதலைப்புலிகள் அவர்களுக்கு பக்கபலமாக இருக்கிறார்களே தவிர, மக்களை கேடயங்களாகப் பயன்படுத்தவில்லை. பிரபாகரனை இலங்கை அரசால் பிடிக்க முடியாது. அவர் சரண் அடையவும் மாட்டார். தற்கொலை செய்யவும் மாட்டார். ஆனால் போர் வியூகத்தை மாற்றுவார். வேறு இடத்தில் இருந்து அது தொடரும் - என்றார்.

# நாஞ்சில் சம்பத் விடுதலை

கோவை, ஏப். 24

உயர்நீதிமன்ற தீர்ப்பின் படி கோவைச் சிறையிலிருந்து நேற்றுமுன்தினம் ம.தி.மு.க. கொள்ளை பரப்புச் செயலர் நாஞ்சில் சம்பத் விடுதலை செய்யப்பட்டார்.

திருப்பூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசினார் என அவர் மார்ச் 7இல் கைது செய்யப்பட்டார். பின்னர் மார்ச் 14இல் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.

தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்தமை தவறு எனக்கூறி ம.தி.மு.க. சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ நேரில் ஆஜராகி வாதிட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் நாஞ்சில் சம்பத்தை கைது செய்தது தவறு என்றும் அவரைக் கைது செய்ய பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது எனவும் தீர்ப்பளித்தனர். இதையடுத்து நாஞ்சில் சம்பத் கோவையில் மத்திய சிறையிலிருந்து நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

# இந்தியச் செய்திகள்

# தமிழர்களையும் விடுதலைப் புலிகளையும் வேறுபடுத்திப் பார்ப்பதில் அர்த்தமில்லை

## வேண்டுமென்றே திசை திருப்புவதாகக் கூறுகிறார் விஜயகாந்த்

சென்னை, ஏப். 24

உண்மையில் தமிழர்களையும் விடுதலைப் புலிகளையும் வேறுபடுத்தி பார்ப்பதில் அர்த்தமில்லை. இந்த உண்மை அனைவருக்கும் தெரியும். இருந்தும் வேண்டுமென்றே இவர்கள் அனைவரும் தமிழர்களைத் திசைதிருப்புகிறார்கள் - என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் முழங்கியுள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு -

விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்ட இயக்கம் என்றும் ஆனால், இலங்கைத் தமிழர்கள் மீது எங்களுக்கு அனுதாபமுள்ளது என்றும் மத்திய அரசு கூறுகிறது. ஜெயலலிதாவும் இதே கருத்தையே சொல்கிறார்.

உண்மையில் தமிழர்களையும் விடுதலைப் புலிகளையும் வேறுபடுத்தி பார்ப்பதில் அர்த்தமில்லை. இந்த உண்மை அனைவருக்கும் தெரியும். இருந்தும் வேண்டுமென்றே இவர்கள் அனைவரும் தமிழர்களைத் திசைதிருப்புகிறார்கள்.

கருணாநிதி பதவி விலகுவதால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு விடிவுகாலம் வந்துவிடாது என்று மத்திய அரசை வலியுறுத்தி இதுவரை தான் எடுத்த நடவடிக்கைகளைப் பட்டியலிடுகிறார். இறுதியில் மத்திய அரசிடம் முறையிட்டும் பயனில்லை, அழுது புலம்புவதைத் தவிர வேறு வழியில்லை என்கிறார்.

கருணாநிதிக்கு அண்ணா சொன்ன வழி மறந்து போய் விட்டதா? 'என்னால் முடிந்தவரை மக்களுக்காகப் பாடுபடுவேன். முடியவில்லையென்றால் அதற்கான காரணங்களை மக்களிடம் எடுத்துச்சொல்லி விட்டு மறு வினாடியே முதல்வர் பதவியிலிருந்து விலகிவிடுவேன்' என்றார். அண்ணாவைப் பொறுத்தவரை பதவி என்பது தோளின் மேல் போடும் துண்டு. ஆனால் கருணாநிதிக்கு அது இடுப்பு வேட்டி.



இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட மத்திய அரசை வற்புறுத்தும் வேலை நிறுத்தப் போராட்டம் ஒரு கண்துடைப்பு வேலை. என்றார் விஜயகாந்த்.

# போரைத் தடுத்து நிறுத்த கருணாநிதி செய்யவேண்டியதைச் செய்யவில்லை

## பழ.நெடுமாறன் குற்றச்சாட்டு

சென்னை, ஏப். 24

இலங்கையில் போரை நிறுத்த முதல்வர் கருணாநிதி எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்யவில்லை என இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -



இலங்கையில் இப்போது ஒவ்வொரு நிமிடமும் ஏராளமான தமிழர்கள் கொல்லப்படுகின்றனர். பல உலக நாடுகள் வலியுறுத்திய பின்னரும், மஹிந்த ராஜபக்ஷ அரசு போரை நிறுத்த மறுத்துவிட்டது. போரை நிறுத்த இந்திய அரசு எதுவுமே செய்யவில்லை.

இந்த நிலையில் முதல்வர் கருணாநிதி பொது வேலை நிறுத்தம் நடத்த அழைப்பு விடுத்துள்ளார். காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசில் தி.மு.க.வும் இடம்பெற்றுள்ளது. மத்திய அரசிடம் பேசி, போரை நிறுத்த நடவடிக்கை எடுக்க வைக்கும் பொறுப்பு தி.மு.க.வுக்குள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்டவர்களை நேரில் சந்தித்து போரை முடிவுக்குக் கொண்டுவர கருணாநிதி நடவடிக்கை எடுக்க வேண்டும். குறைந்தபட்சம் மத்திய அமைச்சரவைக் கூட்டங்களில் தி.மு.க. அமைச்சர்கள் இப் பிரச்சினையை எழுப்பி, போரை நிறுத்த முயலவேண்டும்.

தி.மு.க.வின் இந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்காவிட்டால், மத்திய அமைச்சரவையிலிருந்து தி.மு.க. வெளியேற வேண்டும். இதைத்தான் முதல்வர் கருணாநிதி செய்ய வேண்டும். ஆனால் தி.மு.க.வும் இடம்பெற்றுள்ள மத்திய அரசை வலியுறுத்தி வேலை நிறுத்தம் நடத்துகிறார். செய்ய வேண்டியதை அவர் செய்யவில்லை. தமிழக மக்களை கருணாநிதி ஏமாற்ற முயல்கிறார் - என்றார்.

# ஈழத் தமிழர் படுகொலை சி.டியை வெளியிட அனுமதி கேட்டு வழக்கு

சென்னை, ஏப். 24

'இலங்கையில் தினம் தினம் படுகொலை - இனி என்ன செய்யப் போகிறோம்' என்ற தலைப்பில் ஈழத் தமிழர் அவலம் தொடர்பான சி.டியை வெளியிட அனுமதி கோரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தென்சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகத் தலைவர் தபசிகுமரன் சென்னை உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் தினந்தோறும் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள். இந்தச் சம்பவங்கள் அவ்வப்போது தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. இவ்வாறு ஒளிபரப்பிய காட்சிகளைத் தொகுத்து 'இலங்கையில் தினம் தினம் படுகொலை - இனி என்ன செய்யப்போகிறோம்' என்ற தலைப்பில் சி.டி.யை தயாரித்துள்ளோம்.

காங்கிரஸார் கூறிய முறைப்பாட்டின் அடிப்படையில் இந்தச் சி.டியை வெளியிட தேர்தல் கமிஷன் அனுமதி மறுத்துவிட்டது. எனவே, இந்தச் சி.டியை வெளியிட அனுமதிக்க வேண்டும்.

இதற்காக பொதுக்கூட்டம் நடத்தவும் அனுமதிக்க வேண்டும் - என்றுள்ளது.

இந்த மனுவை நீதிபதி கே.சுகுணா விசாரித்தார். இதுபற்றி எதிர் வரும் 27ஆம் திகதிக்குள் பதில் தரும்படி மாம்பலம் பொலிஸாருக்கு நோட்டீஸ் அனுப்பும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

# சோனியாவை நேரில் சென்று எச்சரித்து கருணாநிதி போரை நிறுத்த வேண்டும்!

## ஈழத் தமிழரைக் காக்க அதுவே வழி என்கிறார் ராமதாஸ்

சென்னை, ஏப். 24

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியை நேரில் சந்தித்து போரை நிறுத்த முதல்வர் கருணாநிதி நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது, இலங்கைத் தமிழர்களுக்காக அவர் பல போராட்டங்களை நடத்தினார். ஆனால் அவருக்கு ஏட்டிக்குப் போட்டியாக கருணாநிதி வேறு போராட்டங்களை நடத்தினார்.

இப்போதும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் நடத்தும் பல போராட்டங்களுக்கு ஏட்டிக்குப் போட்டியாகவே கருணாநிதி போராட்டங்களை நடத்தி வருகிறார். அவர் இவ்வாறு நடத்தும் போராட்டங்களால் ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க முடியாது.

கருணாநிதி நடத்திய போராட்டங்களால் எந்தப் பயனும் இல்லை. போரை நிறுத்த இந்திய அரசு எதுவும் செய்யவில்லை. ஈழத் தமிழர்களை காக்கத் தவறினால் நாங்கள் எங்கள் வழியில் செல்வோம் என காங்கிரஸ் கட்சிக்கு கருணாநிதி ஒருமுறை கூட எச்சரிக்கை விடுக்கவில்லை.



சீக்கியர்கள் கொந்தளிக்கிறார்கள் என்றதும், டில்லியில் அறிவிக்கப் பட்ட வேட்பாளரை காங்கிரஸ் கட்சி அவசர அவசரமாக மாற்றுகிறது. ஆனால் போரை நிறுத்த நடவடிக்கை எடுங்கள். என்ற கருணாநிதியின் கோரிக்கையை ஏற்க மறுக்கிறார்கள்.

கருணாநிதி இன்றே செயற்பட வேண்டும். மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தையும் அழைத்துக் கொண்டு டில்லிக்குச் செல்ல வேண்டும். 'போரை நிறுத்துங்கள்' என்று சோனியாவிடம் நேரில் சென்று எச்சரிக்கை விடுத்து, அதில் வெற்றி பெற்றுத் திரும்ப வேண்டும்.

அது ஒன்றுதான் ஈழத் தமிழர்களைக் 'காக்கும். வேலைநிறுத்தம் தமிழர்களை பாதுகாக்காது - என்றார்.

# ஈழத் தமிழருக்கு நிவாரணப் பொருள்கள் இலங்கைக்குக் கப்பலில் அனுப்பிவைப்பு

இலங்கைத் தமிழர்களுக்கு ரூபா ஆறரைக் கோடி மதிப்புள்ள உணவுப் பொருள்கள், துணிகள் மற்றும் சமையல் பாத்திரங்கள் சென்னை துறைமுகத்தில் இருந்து கப்பல் மூலம் இலங்கைக்கு நேற்றுமுன்தினம் அனுப்பி வைக்கப்பட்டன.

போரால் உணவு, துணிகள் இல்லாமல் தவித்த ஈழத் தமிழருக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களை வழங்க தமிழக அரசு முடிவு செய்தது. அதன்படி கடந்த ஆண்டு நவம்பர் 13ஆம் திகதி முதற்கட்ட நிவாரணப் பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

தற்போது 40 ஆயிரம் குடும்பங்கள் பயனடையும் வகையில் மீண்டும் அவர்களுக்கு நிவாரணப்பொருள்களை வழங்க தமிழக அரசு முடிவு செய்தது.

ஆனால் தற்போது தேர்தல் விதிமுறை [illegible] இருப்பதால், இந்தப் பொருள்களை அனுப்புவதற்காக இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெறப்பட்டது. மேலும் சுங்கத் துறை அனுமதி, பொருள்களை அனுப்புவதற்கான மத்திய அரசின் அனுமதியும் பெறப்பட்டன.

அதைத் தொடர்ந்து இந்தப் பொருள்கள் அனைத்தும் மொத்தம் 58 கொன்ரெய்னர்களில் அடைக்கப்பட்டன.

மொத்தம் ரூபா ஆறரைக் கோடி மதிப்புள்ள இந்தப் பொருள்கள் அடைக்கப்பட்ட கொன்ரெய்னர்கள் அனைத்தும், சென்னை துறைமுகத்தில் உள்ள சி.சி.டி.எல். நிறுவனத்தில் இருந்து வெளிநாட்டு சரக்குக் கப்பலான 'கிரீன் மார'லில் புதன்கிழமை மாலை ஏற்றப்பட்டன. இரவு 10.30 மணிக்குஇலங்கை நோக்கி கப்பல் கிளம்பியது.

இந்தப் பொருள்கள் அனைத்தும் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அங்குள்ள நடைமுறைப்படி இலங்கைத் தமிழர்களுக்கு அவற்றை இந்திய தூதரகம் விநியோகம் செய்யும் - என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னி பேரழிவைத் தடுக்கக் கோரி ஐரோப்பிய நாடுகளின் புலம்பெயர் தமிழ் மக்கள் நடத்தும் போராட்டங்களின் போது லண்டன் மாநகரிலும், பிரான்ஸிலும் எடுக்கப்பட்ட படங்களில் முதல் இரண்டு படங்களிலும் மற்றும் தமிழகம் சென்னையில் போர்நிறுத்தம் கோரி பெண்கள் 13 ஆவது நாளாக நேற்று உண்ணாவிரதத்தை தொடர்வதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கை விவகாரம் வெறும் அறிக்கை மட்டுமே; நடவடிக்கை எதுவும் இல்லை!

கொழும்பு, ஏப்ரல் 24

இலங்கை விவகாரம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபை உத்தியோகப்பற்றற்ற விவாதம் ஒன்றை நடத்தியிருக்கின்ற போதிலும், அந்த விவாதம் உறுதியான நடவடிக்கை எதுவும் எடுக் கப்படாமல் - வெறும் அறிக்கை ஒன்றை வெளியிடுவது என்ற தீர்மானத்துடன் - முடிவடைந்திருப்பதாகத் நேற்று முதற் கொண்டு வந்த தகவல்கள் தெரிவித்தன.

இதன்மூலம் இலங்கை விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை நழுவல் போக்கைக் கடைப்பிடிக்கின்றது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

சீனா, ரஷ்யா உட்பட சில நாடுகள் இலங்கை குறித்து உத்தியோகபூர்வமான முறையில் ஆராய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. இது இலங்கையின் உள்விவகாரம் என அவை கருத்துத் தெரிவித்தன என்று இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாகப் பாதுகாப்புச் சபையால் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க முடியவில்லை என்றும் - சபையின் இம் மாதத்துக்குரிய தலைமையான மெக்சிக்கோ இது குறித்து செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் என மாத்திரம் தீர்மானிக்கப்பட்டதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாதுகாப்புச் சபையின் உத்தியோகப் பற்றற்ற கூட்டத் தொடரில் தனது சமீபத்தைய இலங்கை விஜயம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் தலைமை அதிகாரி விஜய் நம்பியார் உரை நிகழ்த்தியுள்ளார்.

வன்னியின் மிக மோசமான மனிதாபிமான நிலை குறித்து நம்பியார் விவரித்தார் என ஐக்கிய நாடுகளுக்கான பிரிட்டனின் தூதர் ஜோன் சாவெர்ஸ் தெரிவித்துள்ளார்.

**முகாம்களுக்கு கண்காணிப்பாளர் செல்ல அனுமதிக்க வேண்டும்**

''இடம்பெயர்ந்த மக்கள் உள்ள முகாம்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பா ளர்க்ள் செல்வதற்கு இலங்கை அரசு இணங்கவேண்டும். இதன்மூலம் பாது காப்பு வலயத்திலிருந்து வெளியேறும் மக் களை ஐக்கிய நாடுகள்சபை கண்காணித்து, பராமரிக்கலாம்'' என்றும் பாது காப்புச்சபை உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து தப்பிச் செல்லும் மக்களுக்கு இலங்கை அரசு முழுமையான உதவிகளை வழங்கவில்லையென அமெரிக்கத் தூதர் துசன்ரைஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறும் மக்கள் மீது இரு தரப்பும் தாக்குதலை மேற்கொள்ளுகின்றன எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்றைய கூட்டம் குறித்து ஐ.நா.பாதுகாப்புச் சபையின் தலைவர் கிளோடே ஹெசல்லா (மெக்சிக்கோ) தெரிவித்தவை வருமாறு:-

பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்கள் இலங்கை நிலைவரம் தொடர்பாக ஆராய்வதற்காக உத்தியோகப்பற்றற்ற கூட்டத் தொடர் ஒன்றை நடத்தினர்.

**நம்பியாரிடம் கேட்டறிந்தனர்**

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டவிஜய் நம்பியாருடன் அவர் இலங்கையில் மேற்கொண்ட பேச்சுக்கள் குறித்து கேட்டறிந்தனர்.

பாதுகாப்புச்சபை உறுப்பினர்களுக்கு வன்னிப் பிராந்தியத்தின் மனிதாபிமான நிலை குறித்து எமது ஆழ்ந்த கவலையை வெளியிட்டோம். மோதலில் சிக்கியுள்ள மக்களின் நிலை பற்றியும் ஆழ்ந்த கவலை வெளியிட்டோம்.

மேலும் அனைத்து உறுப்பு நாடுகளையும் உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்குமாறும் கேட்டோம்.

**ஆயுதங்களைக் கைவிட புலிகளிடம் கோரிக்கை**

இதனடிப்படையில் பாதுகாப்பு சபை உறுப்பினர்கள் விடுதலைப்புலிகளை ஆயுதங்களை உடனடியாகக் கைவிடுமாறும் பயங்கரவாதத்தைக் கைவிடுமாறும் கேட்டுக் கொண்டோம்.

மோதல் நடைபெறும் பகுதிகளிலுள்ள மக்களை ஐக்கிய நாடுகளின் உதவியுடன் வெளியேறுவதற்கு அனுமதிக்குமாறும் கோரினோம்.

மேலும், மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக பேச்சு மூலமாக அரசியல் நடைமுறையில் கலந்துகொள்ளுமாறும் கேட்டோம்.

பாதுகாப்புச் சபையின் உறுப்பினராக இலங்கை அரசு உட்பட சகல தரப்பினரையும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் கீழ் தமக்குள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுமாறும், மோதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு ஐ.நா. அமைப்புகளை அனுமதிக்குமாறும் கேட்டோம்.

கடந்த சில நாள்களில் மோதல் நடைபெறும் பகுதியிலிருந்து பல ஆயிரக்கணக்கான மக்களை வெளியேற்றியமையை பாதுகாப்புச்சபை வரவேற்கின்றது.

எஞ்சியிருக்கின்ற மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

எதிர்பாராத சூழ்நிலையில், தற்போதைய மனிதாபிமான நெருக்கடியை கைவிடுவதற்கு இலங்கை அரசுக்கு ஐ.நாவின் உதவி முக்கியமானது. எனவே இலங்கை அரசு களப்பணிகளில் ஈடுபட்டுள்ள ஐக்கிய நாடுகளின் பணியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- என்று சொன்னார். (அ-சி)

# சுவிஸ் தமிழ்ப்பேரவையின் இணைப்பாளரின் உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு வந்தது

பேர்ண், ஏப்.24

தமிழர் தாயகத்தில் உடனடிப் போர் நிறுத்தம், அங்கே அல்லற்படும் மக்களுக்கு உடனடி உணவு மற்றும் மருத்துவ உதவி உட்பட 5 கோரிகைகளை முன் வைத்து கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் சாகும் வரையிலான உண்ணாநிலைப் போராட்டத்தினை மேற்கொண்டு வந்த சுவிஸ் தமிழர் பேரவையின் இணைப் பாளர் கிருஸ்ணா (குலம்) அம்பலவாண ரின் உண்ணாநிலைப் போராட்டம் 11 நாள்களுக்குப் பின்னர் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு முடிவுக்கு வந்தது.



சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி பிரான்சிஸ்கா ரொய்ஷர், கார்லோ சொம்மறுகா ஆகியோர் சுவிஸ் வெளிவிவகாரத்துறை அமைச்சின் அலுவலகத்துக்கு முன்பாக பழச்சாறு கொடுத்து உண்ணாநிலைப் போராட்டத்தினை முடித்துவைத்தனர்.

13 ஆம் திகதி தொடக்கம் உண்ணாநிலை இருந்துவந்த கிருஸ்ணா அம்பலவாணர் 15 ஆம் திகதி காவல்துறையினரால் பலாத்காரமாக மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்ட போதிலும் அவர் அங்கும் தனது உண்ணாநிலைப் போராட்டத்தினை தொடர்ந்து வந்தார்.

தனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை நீர் அருந்தவோ, உணவு உண்ணவோ அவர் மறுத்துவந்த நிலையில் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அவருக்கு மயக்க மருந்து வழங்கப்பட்டு சேலைன் ஏற்றப்பட்டது.

எனினும் அவர் தொடர்ந்து உண்ண மறுத்து மருத்துவமனையில் இருந்தார். இதேவேளையில் இவர் முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை சுவிஸ் வெளி விவகாரத்துறை அமைச்சக அதிகாரி களுடனும் நேற்று சுவிஸ் அரச தலைவர் அலுவலக அதிகாரிகளுடனும் தமிழர் பேரவை உறுப்பினர்கள் சந்திப்புக்களை நடத்தியிருந்தனர்.

இந்நிலையில் கிருஸ்ணா அம்பலவாணரால் உண்ணாநிலைப் போராட்டத்தை தொடங்க முன்னர் சுவிஸ் வெளி விவகாரத்துறை அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கு நேற்று மாலை பதில் கடிதம் கிடைத்ததை அடுத்து உண்ணாநிலைப் போராட்டம் முடிவுக்கு வந்தது.

அரசியல் தீர்வு ஒன்றினால் மட்டுமே இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முடியும் என்பதிலும் அதற்குப் போர் நிறுத்தம் அவசியம் என்பதிலும் சுவிஸ் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளது. சர்வதேச சமூகம் ஐ.நா சபை இது விடயத் திலும் முக்கியமான சாதகமான பாத்திரத்தை வகிக்க முடியும் என்பதிலும் தெளிவாக உள்ளோம். அரசியல் தீர்வை நோக்கிப் பேச்சுவார்த்தை ஊடாக மோதலுக்கு முடிவு காணமுற்படுமாறு சகல தரப்பின ரையும் சுவிஸ் கேட்டுக் கொள்கிறது- என்று அந்தப் பதில்க் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அகதிகளை 3 மாதத்துக்குள் மீளக் குடியமர்த்த அரசை வலியுறுத்தி ஐ.தே.க. தீர்மானம்

கொழும்பு, ஏப். 24

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா அகதிமுகாம்களில் தங்கியுள்ள மக்களை மூன்று மாதங்களுக்குள் அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அம்மக்களைப் பார்வையிட நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும அரசியல்கட்சி உறுப்பினர்களுக்கும் அனுமதி வழங்கப்படவேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றியது.

கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்றுக்காலை 7 மணிக்குக் கூடிய கட்சியின் செயற்குழு மேற்படி தீர்மானம் உட்பட மூன்று தீர்மானங்களை எடுத்துள்ளது.

தற்போது இடம்பெற்று வருகின்றன எனக் கூறப்படும் தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இத் தேர்தலில் அரச சொத்துகள், அரச அதிகாரம், ஜனாதிபதி அதிகாரம் ஆகியவை அரசுக்கு ஆதரவாக முற்றுமுழுதாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றைத் தடுப்பதற்கு முறையான நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

யுத்தத்தால் வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வவுனியா அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களை மூன்று மாதங்களுக்குள் மீள்குடியமர்த்தவும் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சி உறப்பினர்கள் அம்மக்களைச் சென்று பார்ப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்தோடு அம்மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களும் மக்களும் முடியுமானவரை உதவிகளை வழங்கவேண்டும்.

மேற்படி மூன்று தீர்மானங்களையும் உடனடியாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையில் அக்கட்சி ஈடுபட்டுள்ளதாக நேற்று ஸ்ரீகொத்தாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நகர் சபை, யாழ்ப்பாணம்.





முல்லைத்தீவில் மக்கள் பாதுகாப்பு வலயம் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டவர்களை முதல் மூன்று படங்களிலும் காயமடைந்த சிறுமியை கடைசிப்படத்திலும் காணலாம்.

# இந்தியா தங்களைக் கைவிட்டுவிட்டதாக ஈழத்தமிழர்கள் வேதனை; பேசவே அஞ்சுகிறார்கள்

## சென்னையில் வைத்து ரவிசங்கர் குருஜி தகவல்



சென்னை, ஏப். 24

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா மாபெரும் தவறிழைத்து விட்டது - என்று ஆன்மீகத் தலைவரும் வாழும் கலை அமைப்பின் நிறுவனருமான ஸ்ரீஸ்ரீ ரவி சங்கர் குருஜி தெரிவித்தார்.

இலங்கையில் மூன்று நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு சென்னை திரும்பிய அவர் அங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்டு, அந்நாட்டு அரசு வவுனியா உள்ளிட்ட பகுதிகளில் அமைத்துக் கொடுத்த முகாம்களில் வசிக்கும் மக்களைச் சந்தித்தேன்.

அவர்களுக்குத் துணிகள் உள்ளிட்ட உதவிகளை வழங்கினேன்.

மனதைக் கல்லாக்கிக் கொண்டுதான் அங்கு போக வேண்டும். மனிதனாகப் போக முடியாது. அரசியல்வாதிகள் சுயநலத்துடன் செயற்படுகின்றனர்.

அவர்கள் ஈழத்தமிழர்களை கைவிட்டுவிட்டார்கள். ஆனால், ஆன்மீகவாதிகள் அவர்களைக் கைவிடவில்லை.

இந்தியா தங்களை கைவிட்டுவிட்டது என ஈழத் தமிழர்கள் கருத்துத் தெரிவித்தனர். அவர்கள் பேசுவதற்கே பயப்படுகின்றனர். தாங்கள் வசித்த பகுதிகளுக்கு திரும்பிச் செல்ல வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து இலங்கை ஜனாதிபதியிடம் பேசினேன். அவர் கிளிநொச்சி உள்ளிட்ட பகுதிகளில் கண்ணிவெடி புதைத்திருப்பதால், அங்கு மக்கள் சென்று வசிக்க 5 ஆண்டுகள் எடுக்கும் என்று தெரிவித்தார். இராணுவம் மீட்டுள்ள பகுதிகளில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்படுவார்களா என்பது பற்றி எனக்குத் தெரியாது - என்றார். (அ)

# புலிகளை விட இலங்கை அரசே அதிக தவறு இழைத்துள்ளது!

புதுடில்லி, ஏப்.24

இலங்கை இனப் பிரச்சினைக்கு இராணுவத் தாக்குதல் மூலம் தீர்வு காணமுடியும் என்று எண்ணியதால், இலங்கை அரசு விடுதலைப் புலிகளை விட அதிக தவறிழைத்து விட்டது - என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

சிவகங்கை மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் சிதம்பரம், நேற்று தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்த பின்னர் செய்தியாளர் களுக்கு அளித்த பேட்டியிலேயே இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது மனிதாபிமான விடயம். அங்குள்ள தமிழர்களின் உயிர்களைக் காப்பாற்றுவது மிகவும் அவசியமானது.

போர் நிறுத்தம் செய்யுமாறு விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இந்தியா பலமுறை வேண்டுகோள் விடுத்தும் இரு தரப்பும் நமது வேண்டுகோளை ஏற்கவில்லை.

அதேசமயம் இனப்பிரச்சினைக்கு இராணுவம் மூலம்தான் தீர்வு காண முடியும் என்று கருதியதன் மூலம் விடுதலைப்புலிகளை விட இலங்கை அரசு அதிக தவறிழைத்து விட்டது. இப்பிரச்சினைக்கு இராணுவம் மூலம் தீர்வு காண முடியாது. பேச்சு மூலமே தீர்வு காணமுடி யும்.

இலங்கையில் தமிழர்களுக்கு அந்தஸ்து மற்றும் உரிமை ஆகியவற்றில் சம மரியாதை அளிக்கப்பட வேண்டும். தமிழர்கள் அதிகம் வசிக்கும் ஒன்று அல்லது இரண்டு மாகாணங்கள் ஏற்படுத்தப்பட்டு, இலங்கையின் கூட்டாட்சி தத்துவத்திற்கு உட்பட்ட சம அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் - என்றார்.

போர் நிறுத்தம் செய்யவில்லை என்றால் இலங்கையுடனான தூதரக உறவைத் துண்டிக்க வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி வலியுறுத்தியிருப்பது பற்றி கேட்டபோது, இது மிகவும் சீரியஸான பிரச்சினை. பத்திரிகையா ளர்கள் சந்திப்பில் இதுகுறித்து விவாதிக்க முடியாது என்று அவர் பதிலளித்தார்.

## ஐ.நா.குழு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவலாம்.

தற்போது அந்தப் பகுதிகளில் சர்வதேசச் செஞ்சிலுவைக் குழு காயமடைந்தவர்களை வெளியேற்ற உதவுகிறது.

பாதுகாப்பு வலயத்தின் தென்பகுதியை நோக்கி மிக மெதுவாக இராணுவத்தினர் முன்னேறிச் செல்கின்றனர்.

நாம் கனரக ஆயுதங்களைத் தற்போது பயன்படுத்தவதில்லை. துப்பாக்கிகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன - என்றார். (அ-சி)

## புதுக்குடியிருப்பில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் வெளியிட்டன. நேற்றைய தாக்குதல் சம்பவங்கள் குறித்து அவை வெளியிட்ட ஏனைய தகவல்கள் வருமாறு:

வலைஞர்மடம், அம்பலவன்பொக்கணை ஆகிய பகுதிகள் மீது படையினர் நேற்று வியாழக்கிழமை செறிவான ஷெல், ஆர்பிஜி உந்துகணை மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களை நடத்தினர்.

இத்தாக்குதலில் காயமடைந்த கியூடெக் கரித்தாஸ் நிறுவனப் பணிப்பாளர் அருட்திரு வசந்தசீலன் அடிகளார் தனது கால் ஒன்றை இழந்துள்ளார்.

கடந்த மூன்று நாள்களில் கத்தோலிக்க திருச்சபையின் மூன்று அருட்தந்தையர்கள் காயமடைந்துள்ளனர்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஈழத்தமிழர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகை மிகவும் குறைந்தே காணப்பட்டது.

இவ்வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து சென்னையில் உள்ள அனைத்துச் சினிமா தியேட்டர்களும் நேற்று மூடப்பட்டிருந்தன. காலை மற்றும் பகல் காட்சிகள் இரத்துச் செய்யப்பட்டன. அத்தோடு சென்னையில் படப்பிடிப்புகளும் இரத்துச் செய்யப்பட்டன. (அ-சி)

## வன்னியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதடி சிறுவர் இல்லம், கைதடி பல்கலைக் கழக ஆயுள்வேத வளாகம், பனை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம், சாவகச்சேரி இந்து, கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி ஆகியவற்றில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

✱ பாடசாலைகளில் தங்கியுள்ளவர்களை கொடிகாமத்தில் நலன்புரி நிலையம் ஒன்றை அமைத்து அங்கு தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

✱ யாழ்ப்பாணம் வந்தவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படுவதுடன் ஏனைய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

குடிதண்ணீர் வசதியை வழங்கும் நோக்குடன் வேம்பிராயில் குளாய்க்கிணறு ஒன்று தோண்டப்பட்டுள்ளது.

60வயதுக்கு மேற்பட்ட 22பேரும் நோயாளர்கள் 20பேரும் அவர்களது உறவினர்களிடம் சேர்க்கப்பட்டுள்ளனர்.

✱ முகாம்களில் பிரிந்திருந்தவர்களில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 150 பேர் குடும்பங்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர் (அ-1)

## ஐ.நா.வின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிதாபிமான நிலைமைகளையிட்டும், மக்களுடைய அவலங்களையிட்டும் கவனம் செலுத்துமாறும் ஐ.நா. பாதுகாப்புச் சபை நேற்று புதன்கிழமை விடுத் திருந்த கோரிக்கை தொடர்பாக அனைத்துத் தரப்பினரும் கவனத்திற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

இலங்கையில் வேகமாக மோசமடைந்து வரும் நிலைமைகளையிட்டு நான் மிகவும் கவலையடைகின்றேன் என்றும் பான்-கீ-மூன் தெரிவித்தார்.

''பாதுகாப்பு வலயப் பகுதிக்கு ஐ.நா.வின் மனிதாபிமானக் குழு ஒன்றை உடனடியாக அனுப்பிவைப்பதற்கு நான் திட்டமிட்டுள்ளேன். அங்குள்ள நிலைமைகளை அவதானிப்பதும், மனிதாபிமான உதவிகளை வழங்குவதும், இந்தப் பகுதியிலுள்ள மக்களின் பாதுகாப்புக்காக எவ்வாறான உதவிகளை எம்மால் செய்ய முடியுமோ அவற்றைச் செய்வதும்தான் இவ்வாறு மனிதாபிமானக் குழுவை அனுப்பிவைப்பதன் பிரதான நோக்கமாகும் என பான்-கீ-மூன் தனது நோக்கத்தை விளக்கியுள்ளார்.

ஏற்கனவே பெருமளவு உயிர்கள் பலிகொடுக்கப்பட்டுள்ளன. இனி இழப்பதற்கு நேரம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக ஐ.நா.வின் இந்த மனிதாபிமானக் குழு அங்கு அனுமதிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்த அவர், அரசாங்கம் இதற்கு ஆதரவையும் விரைந்த உதவியையும் வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (அ)


வணிகக்கல்வி
V.K.ரவிகரன்
(B.Com Dip.in Edu)
A/L 2010
பகுதி - II
முயற்சியாண்மை
ஆரம்பம்: 25.04.2009
சனி காலை 8.00am
NEC
Clock Tower Road, Jaffna

புதிய பிரிவு A/L 2010
இந்துநாகரிகம் - II
ஆரம்பம்:
25.04.2009 சனி 8am
A/L 2011
இந்துநாகரிகம், இந்துசமயம்
ஆரம்: 25.04.2009 சனி
By: S.ஜெயக்குமார் (B.A.Hons)
'தனிப்பாட அனுமதி உண்டு
' இம்மாதக்கட்டணம் இல்லை.
யூனிவேர்சல்

A/L 2011
ஆரம்பம்:-
25.04.2009 சனி மதியம்
தமி: திரு. குழந்தை
அள: திரு.கமல்
இ.நா: திரு.ஜெயக்குமார்
அர: திரு.ஸ்ரீரங்கநாதன்
புவி: திரு.கரன்
நாட: திரு.மயூரன்
இ.சம: திரு.ஜெயக்குமார்
பொரு: திரு. சண்
வணி: திரு.யசோ
கணி: திரு.தவம்
'தனிப்பாட அனுமதி உண்டு
' இம்மாதக்கட்டணம் இல்லை.
யூனிவேர்சல்
(யா இந்து மகளிர் கல்லூரி அருகே)


## பாதுகாப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வே.பிரபாகரன் தங்கியுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

அந்தப் பிரதேசத்தை நோக்கி படையினர் முன்னேறி வருகின்றனர். எஞ்சியுள்ள மக்களையும் படையினர் மீட்டுவிடுவார்கள்.

தரைவழியாகப் பிரபாகரன் தப்பிச் செல்ல முடியாது. பாதுகாப்புப் படையினர் தரைவழியாக அவர் தப்ப முடியாத வாறு பாதுகாப்பு அரண்களை அமைத் துள்ளனர். கடல் வழியாகவே அவர் தப்பிச் செல்ல முடியும் என்றும் இராணுவத் தளபதி 'ஏசியன் ரிபூன்' இணையத்தளத்திற்கு தெரிவித்துள்ளார்.

அதேவேளை -

படையினர் விடுதலைப் புலிகளை முற்றாக வென்றுவிட்டார்கள், இன்னும் சில மணி நேரத்தில் எஞ்சியுள்ள மக்களையும் படையினர் மீட்டுவிடுவர் என வெளிவிவகார அமைச்சர் ரோகித போகெல்லாகம இராஜதந்திரிகளுக்கு தெரிவித்துள்ளார்.

படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை என்றும் அமைச்சர் இராஜதந்திரிகளிடம் கூறினார். (அ-1)

## இந்திய அரசின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பப்படுவதாகவும் அமைச்சர் முகர்ஜி தெரிவித்தார். விசேட தூதுவர்கள் இருவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்துப் பேசுவர்.

பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நடந்த இந்தக் கூட்டங்களில் வெளி விவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி, பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி, உள்துறை அமைச்சர் பி.சிதம்பரம், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளிவிவகார அமைச்சின் செயலர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர் கலந்து கொண்டது தெரிந்ததே. இதேவேளை இலங்கை நிலைவரம் தொடர்பில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, பிரிட்டிஷ் வெளியுறவுத் துறை அமைச்சர் டேவிட் மிலிபாண்டுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

சிக்குண்டுள்ள கடைசி நபர் மோதல் நடைபெறும் பகுதியிலிருந்து வெளியேறி பாதுகாப்பு மிக்க பகுதிகளுக்கு வரும் வரையில் மோதல்களை நிறுத்திவைக்க வேண்டும் என்று இலங்கை அரசிடம் கேட்டுக்கொள்கிறது என இந்திய வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு மட்டும் தீர்வாகிவிட முடியாது. அரசியல் தீர்வு ஒன்றும் எட்டப்படவே வேண்டும் என்பதை இலங்கையிடம் இந்தியா மீண்டும் மீண்டும் வலியுறுத்திவந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை நிலைவரம் குறித்து பேசுவதற்காக அமெரிக்க அரசுத்துறைச் செயலர் ஹிலாரி கிளிண்டன் அம்மையாரையும் பிறநாடுகளுடைய வெளியுறவு அமைச்சர்களையும் தான்தொடர்புகொள்ள இருக்கிறார் என பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.(அ-1)


SHAMROCK
ஈச்சமோட்டை யாழ்.
A/L 2011
இணைந்த கணிதம்
ஆரம்பம்:- 25/4, மா. 3.30pm
T.தவசேகர் B.sc
2010 - நடைபெறுகிறது.
O/L DAY CLASS

பொருளியல்
A/L மாணவர்களே
பொருளியல் முறைமைகள்
பிரபல பொருளியல் ஆசிரியர் வே.கருணாகரன் எழுதிய A/L மாணவர்களுக்கான பாடநூல்
விலை ரூபா 150/=
தொடர்பு: பகவான் மருந்தகம்
221, நவாலர் வீதி, யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org